உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine
www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-179

ஜூலை 1-15 2024



உலகின் மிக உயர்ந்த லிங்கம்

ஐதராபாத்தில் பூரி ஜகந்நாதர் ஆலயம்

e-magazine

e-magazine

திருமண வரன், குழந்தை பேறு குழந்தைகளுக்கு கல்வியை தந்தருளும்

# அகத்தீஸ்வரர் ஆலயம்

e-magazine



# மகாமகப் புண்ணியத்தை சமர்ப்பித்தால் நன்மை தரும் ஸ்ரீ சக்கரபாணி

எட்டு கைகளுடன் அக்னிப்பிழம்பாக தோன்றியவர் ஸ்ரீ சக்கரபாணி, சக்தி வாய்ந்த இந்த சக்ராயுதத்தை கும்பகோணத்தில் ஓரிடத்தில் பிரதிஷ்டை செய்தார் பிரம்ம தேவன்.

இந்த சக்ராயுதத்தால் இருந்து வெளிப்பட்ட ஒளி சூரியனின் ஒளிப்பிரவாகத்தை மிஞ்சும் வகையில் இருந்ததால் பொறாமை கொண்ட சூரிய பகவான் தனது ஒளி அளவை கூட்டிய போது, ஒட்டு மொத்த சூரிய ஒளியையும் தன்னுள் உள்வாங்கிக்கொண்டது இந்த சக்ராயுதம்.

தனது கர்வம் நீங்க பெற்ற சூரிய பகவான், வைகாசி மாதத்தில் மூன்று கண்கள், எட்டு கைகளுடன் அக்னிப்பிழம்பாக தோன்றிய ஸ்ரீ சக்கரபாணியின் காட்சி கிடைக்க பெற்று, இழந்த தனது ஒளியை மீண்டும் பெற்றார் சூரிய பகவான்.

தனது நன்றியை வெளிப்படுத்த சூரிய பகவான் கட்டிய கோவில் தான் இந்த சக்கரபாணி கோவில். கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் "மகாமகம்" திரு விழாவில் கலந்து கொண்டவர்கள், அதில் பங்கேற்ற புண்ணியத்தை இந்த கோவிலின் இறைவனான சக்கரபாணிக்கே சமர்ப்பித்து வேண்டிக்கொள்வதால் நமக்கு மிகுந்த நன்மை களை ஸ்ரீ சக்கரபாணி உண்டாக்குவார் என்பது ஐதீகம்.

# அடிக்கடி நோயால் அவதிப்படும் குழந்தையை குணமாக்கும் வழிமுறை

ஏதேனும் ஒரு தோஷம் குழந்தையை அதிகமாக பீடிக்கும்போதுதான் குழந்தைகள் அடிக்கடி நோய் தாக்கத்திற்கு ஆளாவார்கள். அவ்வாறு பிரச்சனை எதிர்கொள்ளும் பெற்றோர், ஏதேனும் மூன்று இடங்களில் உள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டுவந்து ஒன்றாக ஒரு பாத்திரத்தில் கலந்து, விபூதியை எடுத்து 108 முறை "ஓம் நமசிவாயா" என்று கூறியவாறு அந்த தண்ணீர் பாத்திரத்தில் போட வேண்டும். இதனால் அந்த நீர் நன்றாக மந்திர உரு ஏறியிருக்கும்.

பின் வேப்பிலை கொத்தாக எடுத்து மந்திரம் உருவேறிய நீரில் நனைத்து குழந்தை உடல் முழுவதும் நீர் படுமாறு, மேற்கூறிய மந்திரத்தை கூறி, மந்திரித்தால் விரைவில் குழந்தையை பீடித்த தோஷம் விலகி நோய்களிலிருந்து குழந்தைக்கு விமோசனம் கிடைக்கும்.

e-magazine
aanmeegamalar.com

# தமிழகத்தின் பழமையான காக்கும் பிள்ளையார்



தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டத்தில் ஒன்றான மயிலாடுதுறை மாவட்டம். இந்த மயிலாடுதுறை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள கூரைப்பட்டுக்கு பெயர் பெற்ற கூறைநாடு. இங்கு மிகவும் பழமை வாய்ந்த காக்கும் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு மூல மூர்த்தியாக மூன்றடி உயரமுள்ள பிள்ளையார் கம்பீரமான தோற்றத்துடன் அருள் பாலிக்கிறார். காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற இந்த பிள்ளையார் முன்னொரு சமயம் இங்கு வசித்த மக்களை காவிரி வெள்ளத்தில் இருந்து காப்பாற்றியதால் காக்கும் பிள்ளையார் என அழைக்கப்படுகிறார்.

இக்கோவிலில் பரிவார தெய்வங்களாக முருகன் ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள் மற்றும் நாகர் சன்னதிகள் உள்ளன. பிரகாரத்தில் ஸ்தல விருட்சமாக தொண்மையான வில்வ மரம் உள்ளது. வில்வ மரத்துடன் கூடிய விநாயகரை 108 முறை வலம் வந்தால் திருமணம் கைகூடுவது கண்கூடு. பிரதி மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று அபிஷேகம் மற்றும் அன்னதானம் மிக விமர்சையாக நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியன்று ஹோமம், சிறப்பு அபிஷேகம், அலங்காரம், வீதி உலாவுடன் அன்னதானமும் நடைபெறுகிறது. இதைத் தவிர ஹனுமன் ஜெயந்தி, கந்த சஷ்டி



e-magazine
aanmeegamalar.com



மற்றும் நவகிரக ப்ரீதி ஹோமங்களும் நடைபெறுகிறது.

கடந்த 2012–ஆம் ஆண்டு அஷ்டபந்தனமஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



டெல்லி தியாகராஜன்

காக்கும் பிள்ளையார், பெயருக்கு ஏற்றபடி, வீடு, கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் முன்னேற்றம், திருமணம் போன்ற மக்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி அருள் பாலிக்கிறார் என்பதற்கு கோவிலைச் சுற்றி வசிக்கும் பிள்ளையார் அருள் பெற்ற மக்களே சாட்சி. கோவில் முழுவதும் கருங்கற்களினால் கட்டமைப்பு பணி திட்டமிடப்பட்டு ஜூன் மூன்றாம் தேதி பாலாலயம் நடந்து முடிந்து, ஆலய திருப்பணிகளும் துவங்கியது. கும்பாபிஷேகம் 2025–ல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வழி: மயிலாடுதுறை ரயில்வே ஸ்டேஷனில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

டிரஸ்டி: எஸ். ஹரிஹரன்


தொடர்புக்கு: 9848197131, 9940420095

–டெல்லி தியாகராஜன்
9868423215



# கிரக தோஷங்களை போக்கும் ஸ்தலம்

ஆயுதமேந்திய எட்டு திருக்கரங்களுடன், சக்கர வடிவ தாமரை பூவுடன் கூடிய அறுகோண யந்திரத்தில், நின்ற திருக் கோலத்தில் காட்சி தருபவர் கும்பகோணத்தில் வீற்றிருக்கும் “சக்கர பாணி” இவரை வழிபட்டால் கிரக தோஷங்கள் நீக்கும். சூரியபகவானின் ஆணவத்தை போக்கி அருள்புரிந்ததால், சூரிய பகவானால் உருவாக்கப்பட்ட ஆலயம் இது.



நவக்கிரக நாயகனான சூரியதேவனே வழிபட்டு தன் தோஷம் நீக்கியதால், கிரக தோஷம் உள்ளவர்கள் இத்தலம் வந்து இறைவனை வணங்கினால் எப்பேர்பட்ட கிரக தோஷமும் நீங்கும் என்பது சிறப்பு.

இது பரிகாரத் தலமாகவும் விளங்குகிறது. சனி திசை, ராகு திசை கேது புத்தி போன்ற நவக்கிரக தோஷங்களால் அவதிப்படுபவர்கள் இத்தல நாயகனுக்கு, செவ்வரளி, செம்பருத்தி, துளசி மற்றும் குங்குமம் கொண்டு அர்ச்சனை செய்வது மிகுந்த பலன் அளிக்கும். சக்கரபாணி, ருத்ராம்சம் கொண்டு விளங்குவதால், வன்னி, வில்வ இலை அர்ச்சனைக்கு அதீத பலன் கிடைக்கும்.

# ஒவ்வொரு நாட்களையும் சிறப்பாக்கும் மந்திரமும்

# பெண்களுக்கு அழகையும் வசீகரத்தையும் தரும் மந்திரமும்

e-magazine
aanmeegamalar.com

உலகில் உள்ள அனைத்தும் ஏதோ ஒருவிதத்தில் தொடர்ந்து இயங்குவதற்கு இன்னொன்றை அவசியம் சார்ந்தே இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு கூறவேண்டுமானால், நாம் பயன்படுத்தும் வாகனங்களை எடுத்துக் கொண்டால், அது சும்மா அப்படியே ஓடிவிடாது, அந்த வாகனத்திற்கு பெட்ரோல், டீசல் அல்லது மின்சாரம் போன்ற ஏதாவது ஒரு எரிபொருளை கொடுத்தால்தான் அது ஓடும்.

இந்த இடத்தில் வாகனம் ஏதேனும் ஒரு எரிபொருளை சார்ந்தே உள்ளது.

அந்த எரிபொருளும் கிடைக்கவேண்டுமானால், பணம் கொடுத்தால்தான் அந்த எரிபொருள் கிடைக்கும், இந்த இடத்தில் எரிபொருள் பணத்தை சார்ந்தே உள்ளது.

அந்த பணமும் அப்படியே நமக்கு கிடைப்பதில்லை, ஏதே ஒருவகையில் உழைப்பை கொடுத்தால்தான் அந்த பணம் நமக்கு கிடைக்கிறது.

இப்படித்தான் ஒவ்வொன்றும், ஒவ்வொன்றைச் சார்ந்தே உலகில் வாழ வேண்டியுள்ளது.

அந்தவகையில் நமது ஒவ்வொரு நாளும் சிறப்பாக அமையவேண்டுமானால் நமக்கு ஏதேனும் ஒரு சார்பு தேவை, அந்த சார்புதான் நமது ராசிக்குரிய மந்திரங்கள்.



ஒவ்வொரு நாளும் நமது ராசிக்குரிய மந்திரத்தை நாம் உபயோகப்படுத்தினால் அந்த ராசியின் இயக்கம் நன்றாக அமையும் என்பதால் கிழே உள்ள ஒவ்வொரு ராசிக்குரிய மந்திரத்தையும் குறைந்தது 11 முறை, அதிகபட்சம் 108 முறை கூறி அன்றைய பொழுதை நாம் துவங்கினால் நல்ல பலனை அறுவடை செய்யலாம்.

மேலும் பெண்களுக்கு அழகையும் ஆற்றலையும் தரும் மந்திரமும் உள்ளது. அந்த மந்திரத்தை பெண்கள் பயன்படுத்தும்போது முகவசீகரம் அதி கரிக்கும். விஞ்ஞான ரீதியாக சொல்ல வேண்டுமானால், மந்திரத்தை கூறும்போது நம் முக அங்க அசைவுகள் ஒருசில நரம்புகளையும், முக சதைகளுக்கும் ஒரு வித பயிற்சியாக அமைவதால், பெண்களுக்கு அந்த மந்திரம் அழகையும், தன்னம்பிக்கையையும் அதிகரிக்க செய்வதாகவும் பொருள் கொள்ளலாம். கீழே பெண்களுக்குரிய மந்திரமும் உள்ளது.

### மேஷம்
ஓம் ஐம் க்லீம் சௌம்

### ரிஷபம்
ஓம் ஐம் க்லீம் ஹ்ரீம்

### மிதுனம்
ஓம் க்லீம் ஐம் சௌம்

### கடகம்
ஓம் ஐம் க்லீம் ஸ்ரீம்

### சிம்மம்
ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் சௌம்

### கன்னி
ஓம் ஸ்ரீம் ஐம் சௌம்

### துலாம்
ஓம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரீம்

### விருச்சிகம்
ஓம் ஐம் க்லீம் சௌம்

### தனுசு
ஓம் ஹ்ரீம் க்லீம் சௌம்

### மகரம்
ஓம் ஐம் க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் சௌம்

### கும்பம்
ஓம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஸ்ரீம்

### மீனம்
ஓம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஸ்ரீம்

மேற்கண்ட ராசிக்குரிய மந்திரத்தை தினமும் 11 முறை அல்லது 108 முறை கூறிப்பாருங்கள், ஒரு மண்டலத்திற்குள் நல்ல பலன் கிடைப்பதை உணருவீர்கள்.

காலையில் குளித்து முடித்த பின், காலை உணவிற்கு முன் இந்த மந்திரங்களை கூறுவது சிறப்பு.



## பெண்களை அழகாக்கும் மந்திரம்

பெண்கள் பொதுவாக அழகாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க ஆசைப்படு வார்கள் அப்படிப்பட்ட பெண்களை வசிகரமாக்கும் மந்திரமும் உள்ளது.

**‘ஓம் ஸ்ரீ முகி ஸ்ரீ முகி, ஜெய ஜெய!’**

என்ற இந்த மந்திரத்தை 11 முறை சொல்லுங்கள். தினமும் இந்த மந்திரத்தை சொல்லச் சொல்ல உங்களுடைய முகத்தில் வரும் வசீகரத்தை நீங்களே உணர்வீர்கள். 48 நாட்களில் நிச்சயம் வித்தியாசம் தெரியும்.

48 நாட்கள் முடிந்ததும் இந்த மந்திரத்தை கூறுவதை தொடரலாம், இந்த மந்திரத்தை கூற எந்தவித கட்டுப்பாடும் கிடையாது.

எந்தவித வயது பெண்களும் இந்த மந்திரத்தை பயன்படுத்தலாம், 11 முறை என்பதை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும் இன்னும் சிறப்பு இந்த மந்திரம் மகாலட்சுமிக்கு மிக உகந்த மந்திரமாகவும் விளங்குகிறது.

# முக்கியத்துவம் வாய்ந்த சிவபெருமானின் வடிவங்கள்




சிவபெருமான் அரக்கர்களை அளிக்க எடுத்த பல அவதாரங்களை பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம் ஆனால் நாம் அதிகம் கேள்விப்படாத அவதாரங்கள் இன்னும் பல உள்ளது அது மட்டுமின்றி நமக்கு தெரிந்த அவதாரங்களின் சிறப்புகளையே நாம் இன்னும் முழுமையாக அறிந்துகொள்ளவில்லை.

## பஞ்சமுக சிவன்

சில கோவில்களில் சிவபெருமான் லிங்க வடிவில் இல்லாமல் பஞ்சமுக உருவத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகிறார். இந்த ஐந்து முகங்களுக்கும் தனித்தனி பெயர் இருக்கிறது. ஒவ்வொரு முகமும் சிவபெருமானின் ஒரு அம்சத்தை விளக்குகிறது. அவை முறையே இஷானா, தத்புருஷா, அகோரா, வாமதேவா மற்றும் சத்ஜ்யோதா. இஷானா சிவபெருமானின் நிலையான தன்மையை குறிக்கிறது இது தென்கிழக்கு திசையை நோக்கி இருக்கும். தத்புருஷா முகம் சிவபெருமானின் ஈகோவை குறிக்கிறது இது கிழக்கு நோக்கி இருக்கும். அகோரா முகம் சிவபெருமானின் ஆக்ரோஷத்தையும், மறுபிறப்பு ஆற்றலையும் குறிக்கிறது, இந்த முகம் தெற்கு நோக்கி இருக்கும். வாமதேவா முகம் ஈசனின் வைத்திய திறமையையும், பாதுகாக்கும் பண்பையும் பிரதிபலிக்கிறது, இந்த முகம் வடக்கு நோக்கி இருக்கும். சத்ஜ்யோதா சிவபெருமானின் படைப் பாற்றலை பிரதிபலிக்கிறது, இது மேற்கு நோக்கி இருக்கும்.

## அனுகிரகமூர்த்தி

இந்த அம்சம் சிவபெருமானுடைய அமைதியான காலத்தை குறிக்கும். ஈசன் அழிக்கும் கடவுள் என மட்டுமே அறிந்த நம்மில் பலருக்கு சிவபெருமான் அனுகிரக மூர்த்தியாய் இருக்கும் போது வரங்களை அள்ளித்தருபவர் என தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிவபெருமான் தனது குடும்பத்துடனும், பக்தர்களுடன் இருக்கும்போது அனுகிரக மூர்த்தியாக காட்சியளிப்பார்.

## உக்கிரமூர்த்தி

சிவபெருமான் அழிக்கும் கடவுள் என்பது அனைவரும் அறிந்தது. உக்கிரமூர்த்தியான சிவபெருமான் ருத்ரர், பைரவர், சம்ஹார மூர்த்தி என பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். உக்கிரமூர்த்தியின் ஒவ்வொரு வடிவமும் பூமியில்


e-magazine
aanmeegamalar.com

உள்ள அரக்கர்களை அழிக்கும்அவதாரமாகும். சிவபெருமானின் பல்வேறு உக்கிரமூர்த்தி அவதாரங்கள் கங்கல பைரவர், கஜாசுரவத மூர்த்தி, திரிபுராந்தகமூர்த்தி, சரபேசமூர்த்தி, கலரிமூர்த்தி, கமண்டகமூர்த்தி, அந்தகாசுர வதமூர்த்தி, பைரவமூர்த்தி என சிவபெருமானின் உக்கிரமூர்த்தி அவதாரங்கள் நீண்டுகொண்டே செல்கிறது. ஒவ்வொரு அவதாரமும் அரக்கர்களை அழிக்கவும் , பூமியில் நீதியை நிலை நாட்டவும் சிவபெருமானால் எடுக்கப்பட்டது.

## தாண்டவமூர்த்தி

சிவபெருமான் பல்வேறு நடனங்களின் கடவுளாகவும் கருதப்படுகிறார். இந்திய பாரம்பரிய நடனமான பரதத்தில் இருக்கும் அனைத்து முத்திரைகளும் சிவபெருமானிடம் இருந்தே தோன்றியதாக கூறப்படுகிறது. இந்த ஒவ்வொரு முத்திரையும் உலகின் நிலைப்பாடு ஆகும், சிவபெருமான் இதனை தன் பக்தர்களின் துன்பங்களை போக்க பயன்படுத்தியதாக கருதப் படுகிறது.

புராணங்களில் தன் மனைவியை மகிழ்விக்க சிவபெருமான் எவ்வாறெல்லாம் நடனம் புரிந்தார் என்ற குறிப்புகளும் உள்ளது. நடனங்களின் கடவுளாக சிவபெருமானின் நட்ராஜ அவதாரம் கருதப்படுகிறது. அது மட்டுமின்றி ஈசன் மகிழ்ச்சியில் ஆடும் ஆனந்த தாண்டவ மூர்த்தி, உமை தாண்டவ மூர்த்தியாக அன்னை பார்வதியுடன் நடனம் ஆடுதல், திரிபுர தாண்டவ







மூர்த்தியாக நடனம் ஆடி திரிபுரசுரனை வதம் செய்தது என சிவபெருமான் தாண்டவ மூர்த்தியாக பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

## பிக்ஷதனா

பிக்ஷதனா என்பதன் பொருள் பிச்சையெடுத்தல் என்பதாகும். இந்த அவதாரத்தில் அவர் நாடோடியாக அழிந்துகொண்டிருப்பார். சிவபெருமானின் பிக்ஷதன வடிவம் உலகில் உள்ள அகந்தை மற்றும் அறியாமையை அகற்ற வேண்டும் எனபதை குறிக்கும். இந்த வடிவத்தில் சிவபெருமான் ஆடைகள் குறைந்த மற்றும் போன மனநிலையில் இருப்பார். நன்கு கைகளை உடைய துறவி போல சிவபெருமான் இந்த வடிவத்தில் காட்சியளிப்பார்.

## ஹரிஹர மூர்த்தி

ஹரிஹரன் அல்லது சங்கரநாராயணன் என்று அறியப்படும் இந்த வடிவம் சிவன் மற்றும் பெருமாள் இணைந்த வடிவமாகும். இது சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் இடையே உள்ள நட்பையும், புரிதலையும் உணர்த்தும்படி உள்ளது. இந்த அவதாரத்தில் வலதுபுறம் ஈசனின் வலதுபுறமும் இடப்புறத்தில் பெருமாளின் இடதுபுறமும் இருக்கும்.

e-magazine
aanmeegamalar.com


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# விநாயகர்

- விநாயகர் என்றால் அவரை விட மேலான ஒருவர் இல்லை என்று அர்த்தமாகும்.
- பிள்ளையாருக்கு ஞானக் கொழுந்து என்றொரு பெயருண்டு. ஞானத்தை அருள்வதற்காக விநாயகர் அரச மரத்தடியில் அமர்ந்துள்ளார்.
- சென்னை தியாகராய நகரில் ஆக்ஸ்போர்டு பள்ளி வளாகத்தில் சித்தி சக்தியுடன் பத்துத் தலை கொண்ட வலஞ்சுழி விநாயகர் உள்ளார்.
- விக்னம் என்றால் கஷ்டம். கஷ்டங்களை அகற்றுபவர் என்பதால் விக்னேஸ்வரர் என்கிற பெயர் விநாயகருக்கு ஏற்பட்டது.
- விக்னங்கள் வராமல் நம்மை வேலி போல் காத்து ஆதரிப்பவர் விநாயகர்.
- விநாயகர் ஐந்து கரங்களைக் கொண்டு விளங்குவதினால் 'ஐங்கரன்' என்று அழைக்கப்படுகின்றார்.
- காரைக்காலினைச் சேர்ந்த தாமானங்குடி கிராமத்தில் உள்ள விநாயகர் கோவிலில் பெரிதும் சிறிதுமாய் இரண்டு விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. ஒன்று பிரெஞ்சு விநாயகர் மற்றொன்று இங்கிலீஷ் விநாயகர்.
- விநாயகர் சதுர்த்தி விழா மராட்டியத்திலும், ஆந்திராவிலும் 11 நாட்கள் வழிபாடாகக் கொண்டாடப்படுகின்றது.
- மராட்டியத்தில் தேங்காய்களை உடைத்து விநாயகருக்கு அர்ச்சனை செய்து பக்தர்களுக்கு வழங்குகிறார்கள்.
- மணிப்பூர் மாநிலத்தில் மைரி என்னும் மக்கள் மூங்கில் அரிசியைக் கணபதிக்கு நிவேதனம் செய்து வழிபாடு செய்கின்றார்கள்.
- எகிப்தில் உள்ள விநாயகர் தமது கையில் சாவி வைத்து இருக்கிறார். தம்மை வழிபாடு செய்பவர்களுக்கு இவர் சொர்க்கத்தின் வாசலைத் திறந்து விடுவார் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது.
- வைணவ கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் தும்பிக்கையாழ்வார் என்று அழைக்கப்படுகின்றார்.
- கணபதிக்கும், சனீஸ்வரனுக்கும் பிரியமானது வன்னி மரம். எனவே, வன்னிமர இலைகளால் விநாயகப் பெருமானை வழிபட்டால் சனிபகவான் தொல்லைகள் நீங்கும்.
- கணபதி வழிபாடு என்பது காணா பத்யம் என்றழைக்கப்படுகிறது. இது ஆதிசங்கரர் சிறப்பித்த வழிபாடு ஆகும்.
- விநாயகப் பெருமான் சித்தி, புத்தி என்ற தம் மனைவியர் மூலம் உருவாக்கியவர் தான் சந்தோஷி மாதா ஆவார்.
- அசோகர் காலத்தில் அவர் மகள் சாருமதி நேபாளத்தில் விநாயகருக்குக் கோவில் கட்டினார்.
- புத்தர்கள் விநாயக வழிபாடு செய்கின்றார்கள்.
- விநாயகர் சதுர்த்தியைத் தொடர்ந்து ஒன்பது நாள் விநாயக விரதம் இருந்து வணங்குதல் விநாயக நவராத்திரி எனப்படும்.
- விநாயகர் புகழ்பாடும் நூல்கள்: ஸ்ரீகச்சியப்ப முனிவர் அருளிய விநாயகக் கவசம், ஸ்ரீவிநாயக சப்தகம், ஷோடச கணபதி துதிகள், ஸ்ரீகணேச புஜங்கம், ஸ்ரீகணேச பஞ்ச ரத்னம், ஸ்ரீகணேச வைகறைத் துதி, அவ்வையார் அருளிய விநாயகர் அகவல், ஸ்ரீகணேஷாஷ்டகம்.
- விநாயகருக்கு வெள்ளி விரதம், செவ்வாய் விரதம், சதுர்த்தி விரதம், குமார சஷ்டி விரதம், சங்கடஹர சதுர்த்தி, தூர்வா கணபதி விரதம், சித்தி விநாயக விரதம், துர்வாஷ்டமி விரதம், விநாயக நவராத்திரி விரதம் ஆகிய விரதங்கள் உள்ளன.





– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம் சென்னை–600117
தொலைபேசி எண்: 9940460969

# தட்சிண கைலாயம்

## தமிழக கேரளா எல்லையில் உலகில் மிக பெரிய சிவலிங்கம்

கன்னியாகுமரி திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நாகர்கோவில் அருகே தமிழக கேரளா எல்லையில் உள்ள களியக்காவிளை அருகே உதயார்றின்கர செங்கல் என்னுமிடத்தில் தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவில் உள்ளது. இக்கோவிலில் 112 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் வழிபடும் மகா சிவலிங்கத்திற்கு மீண்டும் உலக அங்கீகாரம்: தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவிலில் உலக சாதனை படைத்த உலகின் மிக உயரமான சிவலிங்கம் அமைந்துள்ள மகா சிவலிங்கம் மீண்டும் உலக அங்கீகாரம் பெற்றுள்ளது. இது குளோபல் ரெக்கார்ட்ஸ் – ரிசர்ச் பவுண்டேஷனால் தேசிய சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் நிர்வாகிகள் கோயிலுக்குச் சென்று விரிவாகச் சோதனையிட்டனர். அங்கீகாரச் சான்றிதழை மாண்புமிகு சத்தீஸ்கர் வருவாய்த் துறை அமைச்சர் ஸ்ரீ டாங்க் ராம் வர்மா சுவாமி மகேஸ்வரானந்தா சரஸ்வத்திடம் வழங்கினார். குடும்பத்துடன் வந்திருந்த மாண்புமிகு அமைச்சர் கோயில் மற்றும் சிவலிங்கத்தை தரிசித்துவிட்டு திரும்பினார். மனித வாழ்வில் எங்கும் காண முடியாத அற்புதக் காட்சிகளும், 80 அடி உயரத்தில்



e-magazine
aanmeegamalar.com





சுவாமி மகேஸ்வரானந்தா சுவாமியிடம் சான்றிதழ் வழங்கும் சத்தீஸ்கர் வருவாய்த் துறை அமைச்சர் டாங்க் ராம் வர்மா,

வீற்றிருக்கும் மகா சிவலிங்கமும், அற்புதமான அனுமனும், இந்த மகா சிவலிங்கத்தையும் தவற விடுவது பெரும் இழப்பு என்றார். மேலும் பல பாராட்டுகளை வெல்வார்கள். இவ்விழாவில் கோவில் மேல்சாந்தி குமார் மகேஸ்வரம் கலந்து கொண்டார்.

இக்கோவிலில் விநாயகப் பெருமானின் 32 வடிவங்கள் இருக்கின்றன.

விநாயகப் பெருமான் தடைகளை நீக்குபவர், நல்ல ஆரம்பம் மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தின் கடவுள். வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளில் இருந்து பக்தர்களைக் காப்பாற்ற விநாயகப் பெருமான் 32 வடிவங்களை மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் நிறுவி வழிபடுகின்றனர்.

## விநாயகப் பெருமானின் 32 வடிவங்கள்

- பால கணபதி (குழந்தை போல்)
- பக்தி கணபதி (பக்தர் வடிவம்)
- துண்டி கணபதி (கணபதியை தேடி)
- துர்கா கணபதி (அம்மா துர்காவைப் போன்றவர்)
- த்விஜ கணபதி (இரண்டு முறை பிறந்தவர்)
- த்விமுக கணபதி (இரண்டு தலைகளுடன்)
- ஏகதந்த கணபதி (ஒற்றைத் தந்தம்)
- ஏகாக்ஷர கணபதி (ஒற்றெழுத்து இறைவன்)
- ஹரித்ரா கணபதி (செல்வத்திற்காக)
- ஹேரம்ப கணபதி (அற்புதமான பாதுகாவலர்)
- க்ஷிப்ர கணபதி (விரைவாக அருள்பாலிக்கிறார்)
- க்ஷிப்ர பிரசாத கணபதி (விரைவான வெகுமதி)
- லட்சுமி கணபதி (அதிர்ஷ்டசாலி)
- மகா கணபதி (பிரபலமாக வழிபடப்படுகிறது)
- நிருத்ய கணபதி (நடனக் கலைஞர்)
- ரிணமோசன கணபதி (கடன்களில் இருந்து விடுவிப்பவர்)
- சங்கடஹர கணபதி (துக்கங்களைப் போக்குபவர்)
- சக்தி கணபதி (சக்தி வாய்ந்த வடிவம்)



- சித்தி கணபதி (புத்தியின் மாஸ்டர்)
- சிம்ம கணபதி (அச்சமற்ற)
- சிருஷ்டி கணபதி (படைப்பாளர்)
- கணபதி கேடட்கள் (இளைஞர்)
- திரிமுக கணபதி (மூன்று முகம்)
- த்ரயக்ஷர கணபதி (ஏயுஎம்ன் இறைவன்)
- உச்சிஷ்ட கணபதி (மேன்மையின் இறைவன்)
- உத்தண்ட கணபதி (தர்மத்தை அமல்படுத்துபவர்
- ஊர்த்துவ கணபதி (உயர்ந்தவர்)
- வரத கணபதி (வரம் கொடுப்பவர்)
- விக்ன கணபதி (தடைகளின் அதிபதி)
- விஜய கணபதி (வெற்றி)
- வீர கணபதி (தைரியமானவர்)
- யோக கணபதி (யோக தோரணையில்)

மகேஸ்வரம் கோவிலில் விநாயகப் பெருமானின் இந்த 32 வடிவங்களையும் சேர்த்து வழிபட்டால், ஒரு பக்தரின் வாழ்க்கையில் உள்ள தடைகள் நீங்கும்.

## ஜோதிர்லிங்க தரிசன கோவில்

மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் சிவபெருமானின் துவாதச (பன்னிரண்டு) ஜோதிர்லிங்கம், ஸ்ரீ சிவபார்வதியைச் சுற்றிலும், சுத்தம்பலத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவில் பன்னிரண்டு வெவ்வேறு இடங்களில் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உள்ளன.


ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
Free e-book

Scan to Read aanmeegamalar Website



அவை சௌராஷ்டிராவில் (குஜராத்) சோமநாத லிங்கம். ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுன லிங்கம், உஜ்ஜயினியில் மஹாகாலேஸ்வர லிங்கம், ஹிமவத்கிரியில் நர்மதா நதிக்கரையில் ஓம்காரேஸ்வர லிங்கம், பேவகிரியில் பீமசங்கர லிங்கம், ஜார்கண்டில் வைத்தியநாத லிங்கம்.

வாரணாசியில் கோதாவரி விஸ்வநாத லிங்கத்தில் திரயம்பக லிங்கம், தாருகாவனத்தில் நாகேஸ்வரலிங்கம், ராமேஸ்வரத்தில் ராமேஸ்வர லிங்கம், தௌலதாபாத்தில் கிருஷ்ணேஸ்வர லிங்கம். ஒவ்வொரு ஜோதிர்லிங்கமும் சிவபெருமானின் வெவ்வேறு வெளிப்பாடுகளாகக் கருதப்படுகிறது.



அழகுராஜா

துவாதச ஜோதிர் லிங்க வடிவில்சிவபெருமானின் அருளால் பிரசாதம் வழங்குவதன் மூலமும், அனைத்து வகையான தோஷங்களும் (துரதிர்ஷ்டங்களும்) நோய்களும் தங்கள் வாழ்க்கையில் இருந்து நீங்கும் என்று



பக்தர்கள் நம்புகிறார்கள். மகேஸ்வரம் கோவிலின் தனிச்சிறப்புகளில் ஒன்று,

இக்கோவில் ஒரே நேரத்தில் உலகின் மிக உயர்ந்த சிவலிங்கத்தையும், 32 விநாயக மூர்த்தங்களையும், 12 ஜோதிர்லிங்க தரிசனத்தையும் ஒன்றுசேர கிடைப்பதால் உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோவிலுக்கு துவாதச (பன்னிரண்டு) ஜோதிர்லிங்கத்தை ஒன்றாக வணங்குவதற்கு வருகை தருகின்றனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

# 176 க்கும் மேற்பட்ட

# இதழ்களை




# aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

# காசியில் சூரிய பகவானை வழிபடும் இடங்கள்

e-magazine
.com

சிவபெருமான் மந்திராச்சலில் இருந்தார். காசியை திவோதாஸ் என்ற மிகவும் பக்தியும் ஆன்மீக பற்றும் கொண்ட மன்னன் ஆட்சி செய்தான். அவருடைய ராஜ்யத்தில் ஒவ்வொருவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள், எல்லா இடங்களிலும் செழிப்பு இருந்தது. தான் ஆட்சி செய்யும் வரை, தேவர்களும் மற்ற வானவர்களும் காசியை விட்டு விலகி இருக்க வேண்டும் என்றும், காசியில் எந்தக் குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்றும், பிரம்மதேவனிடம் ஒரு புரிந்துணர்வு புரிந்தார்.

பிரம்மதேவன் அதற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் திவோதாஸ் மன்னன் தன்னை ஒரு சிறந்த மற்றும் திறமையான நிர்வாகியாக நிரூபிக்க வேண்டும் மற்றும் காசியில் வசிக்கும் அல்லது காசிக்கு வரும் மக்கள் அனைவரும் தங்கள் ஆன்மீக விஷயங்களில் நன்றாக நடத்தப்பட வேண்டும் அதற்கு சம்மதித்த மன்னன் அதற்கேற்ப சிறப்பான ஆட்சியை அளித்தான்.

ஆன்மிகமலர்

நீண்ட நாட்களாக காசியை விட்டு விலகியிருந்ததால் மிகவும் வருத்தமடைந்த சிவபெருமான் திவோதாஸ் மன்னன் ஏதாவது தவறு செய்ய விரும்பினார், அதன்படி அவர் அறுபத்து நான்கு யோகினி களை சில இடையூறுகளை உருவாக்க காசிக்கு அனுப்பினார்.

ஆனால் அவர்கள் சொர்க்கத்தின் ஒரு பகுதியாகத் தோன்றிய காசியின் அழகு மற்றும் அமைதியானசூழலால் கவரப்பட்டனர். கடைசியில்



அங்கேயே குடியேறினார்கள்.

யோகினிகள் திரும்பி வரத் தவறியபோது, சிவன் திவோதாஸ் மன்னனைத் தனது தீர்மானத்தில் தோற்கடிக்க காசியில் சில இடையூறுகளை உண்டாக்குமாறு அறிவுறுத் தல்களுடன் சூரியனை அனுப்பினார். சூரிய பகவான் காசிக்கு வந்து ஜோதிடர். கற்றறிந்த பண்டிதர். சமயப் பிரச்சாரகர், வியாபாரி. பிராமணர் போன்ற வேடமணிந்தார்.


ஆனால், காசியில் உள்ள எவரிடமும், திவோதாஸ் அரசரின் ஆட்சியிலும் எந்தத் தவறும் காண முடியவில்லை. சூரிய பகவானும் காசி மற்றும் நகரத்தின் அழகின் மீது மிகவும் ஈர்க்கப்பட்டார். சிவபெருமானின் விருப்பத்தை நிறைவேற்றாமல் மீண்டும் மந்திராச்சலத்திற்குச் சென்றால், சிவபெரு மானுக்கு கோபம் வரும் என்று சூரிய பகவான் நினைத்தார்.

சூரிய பகவான் இறுதியாக காசியில் தங்க முடிவு செய்தார். சிவபெருமானின் கட்டளைகளை மீறுவது பாவம், ஆனால் காசியில் தங்கி ஆன்மீக காரியங்களை மேற்கொள்வதால் அத்தகைய பாவங்கள் எளிதில் தீர்ந்துவிடும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். அதன்படி சூரிய பகவான் தற்போதைக்கு காசியில் குடியேறி காசியில் பன்னிரண்டு இடங்களில் வேறு வேறு ஆதித்ய ரூபமாக காட்சி அளித்தார். ஆக, சூரிய பகவான் தனது பன்னிரண்டு வடிவங்களில் வழிப்படப்படுகிறார். மேலும் காசி காண்டம் பன்னிரண்டு ஆதித்யர் களின் முக்கியத்துவத்தை பின்வருமாறு விவரித்துள்ளது.

அருண் ஆதித்யா

ஒரு காலத்தில் அவள் அடிமையாகிவிட்ட வினதாவின் இக்கட்டான நிலையை ஸ்கந்த பகவான் விவரித்தார். அகஸ்திய முனிவர் தனது அன்றாட நடவடிக்கைகளில் மிகவும் பக்தியுடன் இருந்தாலும், அவளை அடிமையாக மாற்றியது என்ன என்பதை அறிய விரும்பினார்.

பகவான் ஸ்கந்தன் இவ்வாறு விவரித் தார்: காஷ்யப் முனிவருக்கு பல மனைவி கள் இருந்தனர். அவர்களில் இருவர் கத்ரு மற்றும் வினதா கத்ரு நூறு பாம்பு களைப் பெற்றெடுத்தபோது, வினதா



ஆந்தை, கருடன். அருண் ஆகிய மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். ஆரம்பத் தில் ஆந்தை பிறந்தபோது, அவர் அனைத்து பறவைகளுக்கும் ராஜாவானார்.

ஆனால் அவரது திறமையின்மை காரண மாக, பறவைகள் அவரைப் புறக்கணிக்கத் தேர்ந்தெடுத்தன. எனவே. இன்றுவரை பறவைகளுக்கு சொந்த ராஜா இல்லை. ஆந்தை அவளுடைய முதல் சந்ததியாக இருந்தபோது, மற்ற இரண்டும் முட்டையில் இருந்தன. எஞ்சியிருக்கும் முட்டைகள் குஞ்சு பொரிக்க வேண்டும் என்று வினதா விரும்பினாள். ஆனால் அவள் மிகவும் அதிர்ச்சியடைந்து, முட்டைகள் குஞ்சு பொரிக்கவில்லை. தன் முதல் குழந்தை ஏளனத்திற்கு ஆளாகும் வேதனையை அவ ளால் தாங்க முடியவில்லை.

எனவே. குழந்தையைப் பெற்றெடுக்கும் ஆர்வத்தில், ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில், முன்கூட்டியே முட்டை களில் ஒன்றை உடைக்க முடிவு செய்தாள். அவள் முட்டையை உடைத்து திறந்தவுடன், உள்ளே ஒரு குழந்தை.

தொடையிலிருந்து மேல்நோக்கி முழு மையாக வளர்ந்திருப்பதைக் கண்டாள். ஆனால் கால்களைக் குறிக்கும் கீழ் பகுதி இன்னும் உருவாக்கத்தில் இருந்தது.

இவ்வாறு, காசி காண்டம் அத்தியாயம் 51 இல் அருண் (விடியல்) என்று குறிப்பிடப்பட்ட குறைமாதப் புதிதாகப் பிறந்த குழந்தை, தனது தாயின் பொறுமையின்மையைக்

e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





e-magazine
aanmeegamalar.com

கண்டு மிகவும் கோபமடைந்தது. அருண் தன் தாயை கத்ருவின் பிள்ளைகளுக்கு அடிமையாகிவிடு என்று சபித்தான். வினதா நிரபராதி என்று கெஞ்சினாள். அருண் அவள் மீது பரிதாபப்பட்டான். மூன்றாவது முட்டையில் பொறுமையாக இருக்க வேண்டும் என்று கூறினார். இந்த முட்டையிலிருந்து பிறக்கும் குழந்தை. அவளை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்.

அப்படிச் சொல்லிவிட்டு, அருண் உரிய காலத்தில் அந்த ஊனத்திலிருந்து விடுபட விரும்பினான். அவன் காசிக்கு வந்து சூரிய பகவானை தவம் செய்யத் தொடங்கினான். பகவான் நேரில் தோன்றி அருணனை ஆசீர்வதித்தார். அருண் எல்லா சமயத்திலும் என்னுடனே இருப்பார் என கூறினார் சூரிய பகவான். மேலும், அருண் ஆதித்ய ரூபத்தில் என்னை வழிபடும் ஒருவருக்கு துக்கம் என்னவென்று தெரியாது. வறுமை எப்போதும் தொலைவில் இருக்கும் என்றார் சூரிய பகவான்.

காசி காண்டத்தின் கூற்றுப்படி, அருண் வழிபடுபவர் நோய்வாய்ப்பட ஆதித்யாவை ஒருபோதும் மாட்டார். மேலும் பக்தரின் சுமூகமான வாழ்க்கையில் எந்த தடையும் இருக்காது. துன்பம் என்றால் என்ன என்று பக்தனுக்குத் தெரியாது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178



கீதாசமையல்

# SPECIAL FOOD

இயற்கை
மூலிகைகளால்
சுத்தமாக
தரமாக
தயாரிக்கப்பட்டது

# கீதாசமையல் ஸ்பெஷல் புட்




R.N.22424543000080

## மூட்டுவலி, ஞாபகமறதி, இளநரை, பிரச்சனைகளை தீர்க்கும் கீரை வகை இட்லிபொடிகள்

| | | |
|---|---|---|
| தூதுவளை கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| முடக்கத்தான் கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| வல்லாரைக்கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| கொள்ளு இட்லிபொடி | 100gm | Rs.110 |
| கறிவேப்பிலை இட்லிபொடி | 100gm | Rs.100 |

ஐந்து பொடிகளையும் வாங்குபவர்களுக்கு இந்தியா முழுவதும் கொரியர் இலவசம்

முதுகுவலி, வயதுக்கு வந்த பெண்களுக்கும், கணினியில் தொடர்ந்து அதிகநேரம் பணிபுரிபவர்களுக்கும், ஏற்படும் எலும்பு தேய்மானம், கழுத்து பிரச்சனைகளை தீர்க்கும் கருப்பு உளுந்து, சுக்கு கஞ்சி மாவு கிடைக்கும்

¼ கிலோ ரூ.170 (கொரியர் கட்டணம் தனி)

மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன் பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல் வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.

மேலும்விபரங்களுக்கு: 7550199561

# மனித மனதில் செம்மையை கொடுக்கவேண்டியது மதம்

**கடவுள் உருவாக்கிய மதம்**

ஒருகாலத்தில் நாடுகளுக்கு மத்தியில்நிலவி வந்த மண்ணாசை உலக அமைதிக்கு எதிராக இருந்தது. நடந்து முடிந்த இரண்டு உலகமாக யுத்தங்களும் நாடு பிடிக்கும் ஆசையால் தோன்றி யது என்பது அனைவரும் அறிந்த செய்தி. இரண்டாம் உலகமாக யுத்தம் முடிந்த பிறகு வல்லரசுகளுக்கு இடையில் நிலவி வந்த பனிபோர் எந்த நிமிடமும் உலகத்தை அழித்து விடும் ஜனசமூகத்தை பூண்டற்று போக செய்து விடும் என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் பரவ லாக வைத்திருந்தது. ஆயுதங்கள் கொண்டு மனிதர் களை பயமுறுத்துகிற காலம் போய் இன்று மதங்களை வைத்து கிலிமூட்டுகிற காலம் வந் திருக்கிறது.



மதங்கள் என்பது மனிதனை பண் படுத்த கூடியது காட்டாற்று வெள்ளம் போல தாறுமாறாக திரிக்கின்ற மனதை ஒரு நிலை படுத்தி இறை வனை பற்றி சிந்திக்க செய்து கண்ணுக்கு தெரிகின்ற இவ்வுலக வாழ்வையும் கண்ணுக்கு தெரியாத அவ்வுலக வாழ்வையும் சீராக செப்பனிட்டு வைத்து கொள்ளும் கருத்துக்களை ஆழமாக ஊன்றுவது மதங்களின் தலையாய பணி. துன்பம் இல்லாத மனிதனே இவ்வுலகில் இல்லை என்று சொல்லலாம். இப்படி துன்பங்கள் வந்து மனிதனை வாட்டி வதைக்கும் போது அவன் தன் மனதிற்குள் போட்டு குமைந்து கொண்டு யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவிர்க்கும் போது இறை நம்பிக்கையும் மத உணர்வும் மனிதனுக்கு கை கொடுத்து மனித உறவுகளால் கொடுக்க முடியாத ஆறுதலையும் தேறுதலையும் மதங்கள் கொடுக்கிறது என்று துணிந்து சொல் லலாம். மதம் என்ற ஒன்று இல்லை என்றால் மனிதர் களில் முக்கால்வாசி பேர் மனநோயாளியாக ஆகி யிருப்பார்கள். அல்லது நினைத்து பார்க்கவே முடியாத பெரிய குற்றங்களை செய்துவிட்டு சிறைச்சாலைகளில் இருப்பார்கள். தாய் தந்தையர் பாசம் அண்ணன் தம்பி நேசம் மாமன் மச்சான் உறவு இன்றும் இருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் மதமே ஆகும். சமூக உறவுகளில் விரிசல்கள் வரும் போது

மதமும் மத சடங்குகளும் அந்த விரிசல்களை சமபடுத்துகின்றன. ஆனால் சில அறிவாளிகளின் கண்களில் இத்தகைய நல்ல அமசங்கள் எதுவும் படுவது இல்லை. அவர்கள் கண்களை மூடி கொண்டு மதம் என்றாலே கொடுமை கொடுரம் மூடத்தனம் என்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

அப்படி அவர்கள் பேசுவதற்கு காரணங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. இதுவரையில் நடந்த இரண்டு சிலுவை போர்களில் மனித சமூகம் பறிகொடுத்த உயிர்களின் எண்ணிக்கை மிக அதிகம். போப் ஆண்டவர்கள், மவுலவிகள், சமய குருமார்கள் என்று சொல்லி கொண்ட ஒரு சிலரால் நிகழ்த்தப்பட்ட வன்முறைகளை பார்க்கும் போது அணுகுண்டுகளால் இறந்தவர்களை விட மதங்களால் நிகழ்த்தப்பட்ட வன்முறையால் இறந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமோ என்று தோன்றிகிறது.


‘இன்று நாடு பிடிக்கும் ஆசை யாருக்கும் இல்லை அமெரிக்கா, ரஷ்யா என்ற இரு வல்லரசு கள் ஆயுத போட்டியை நிறுத்தி விட்டன. அப்பாடா உலகம் இனியாவது அமையாதாக இருக்கும் என்று நினைத்த போது மத வெறி என்பது பெரும் பிசாசாக எழுந்து நின்று நம்மை அச்சுறுத்துகிறது. இதுவரை உலகத்தில் தோன்றிய கொடுங்கோலர்களை விட மிக அதிகமான கொடுக்கோன்மையை இந்த இடைப்பட்ட காலத்தில் மத வெறியர்களால் நிகழ்த்தப்பட்டு விட்டதை நமது கண்களாலேயே பார்த்து விட்டோம். எனவே மதம் என்பதே அராஜகத்தின் இன்னொரு வடிவம் தானோ என்று அமைதியை விரும்புபவர்கள் நினைக்க துவங்கி விட்டார்கள்.

மனித மனதில் செம்மையை கொடுக்க வேண்டிய மதம் வெறியை கொடுப்பது ஏன்? பொதுவாக மனிதர்கள் தற்பெருமை பாராட்டி கொள்வதில் விருப்பம் உடைய வர்களாக இருக்கிறார்கள். பள்ளி பருவத்திலேயே என் பேனாதான் உயர்ந்தது என் புத்தக பைதான் சிறந்தது என்ற எண் ணம் தலைதூக்கி மற்றவர்களிடம் இருப் பது அனைத்துமே மட்ட மானது என்ற எண்ணம் வலுவடைந்து விடுகிறது. இந்த எண்ணமே காலம் வளர வளர என் குடும்பம் உயர்ந்தது என் ஊர் உயர்ந்தது என் சமூகம் உயர்ந்தது என் ஜாதி உயர்ந்தது என்ற வகையில் வளர்ந்து கடேசியில் என் மதம் மட்டுமே சிறந்தது என்ற முடிவிற்கு மனிதனை கொண்டு நிறுத்தி விடுகிறது.

நான் உயர்ந்தவன் என்று நினைத்து கொள் வதில் தவறு அல்ல ஆனால் நான் மட்டுமே உயர்ந்தவன் மற்றவர்கள் அனைவருமே தாழ்ந்த வர்கள் என்று நினைக்கும் போது தான் பிரச்சனைகள் உருவாக துவங்குகின்றன. தன்னை உயர்ந்தவனாக நினைக்கும் ஒருவன் தன்னை சார்ந்த அனைத்துமே சிறந்தது என்று கருதி மற்றவர்களுக்கு சொந்தமானவைகளை கீழ்த்தரமாக பார்ப்பதோடு அல்லாமல் அவைகளை அழிக்கவும் துணிந்து விடுகிறான். இந்த வகையில் மற்ற மதங்களை தாக்க துணியும் போது மற்றவர்களும் இதே வேலையை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் அமைதியான உலகம் போர்களமாக மாறிவிடுகிறது.

மனிதர்கள் இப்படி சண்டையிட்டு மாய்வார்கள் இதனால் உலக அமைதி கெடும் என்பதை சித்தர்கள் தீர்க்க தரிசனமாக உணர்ந்தார்கள். இதனால் இது என் கடவுள் அது உன் கடவுள் என் கடவுள் உயர்ந்தவர் உன் கடவுள் தாழ்ந்தவர் என்றெல்லாம் சச்சரவு இட்டு வெறியை வளர்த்து கொள்வதை மிக வன்மையாக கண்டித்தார்கள்.

எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு
தேவரோ அங்குமிங்கும் ஆகி நின்ற ஆதி
மூர்த்தி ஒன்றலோ அங்குமிங்கும் ஆகி நின்ற
ஆதி மூர்த்தி ஒன்றெனில் வங்க வாரம் சொன்ன
பேர்கள் வாய்புழுத்து மாய்வரே



என்று சிவவாக்கியர் மிக கடுமையான வார்த்தை பிரயோகங்களால் சாடு கிறார். கிராமத்தில் அநியாய வட்டி வாங்குபவர்களை நியாய தர்மங்களுக்கு கட்டுபடதவர்களை அடுத்தவன் மனை வியை கெடுத்தவரை ஊரான் நிலத்தை அபகரித்தவரை வாங்கிய கடனை திருப்பி கொடுக்காமல் ஏமாற்றியவரை புழுத்துதான் சாவான் என்று சாபம் இடுவார்கள். அதாவது பஞ்சமா பாதகங்கள் என்ற கொடிய செயல் செய்பவர்களுக்கு கொடுக்கப்படும் சாபம் இது. இதே சாபத்தை கடவுளில் பேதம் காண்போரை மதவெறியை தூண்டுவோரை

கலவரத்தை ஏற்படுத்தி விட்டு வன்முறை நெருப்பில் குளிர்காய்பவர்களை பார்த்து சிவவாக்கியர் இடுகிறார். சித்தர்களின் மனதில் எந்த அளவு சமூக கொடுமைகளுக்கு எதிரான எண்ணம் இருந்திருந்தால் இத்தகைய சாபங்களை அவர்கள் கொடுப்பார்கள் என்பதை நாம் எண்ணி பார்க்க வேண்டும்.




சித்தர்களின் சித்தாந்தம் பரோலோக ராஜ்யத்திற்கு மனிதர்களை வழிநடத்தி செல்வது என்று பலர் நினைக்கிறார்கள். இதை முற்றிலும் சரியானது என்று சொல்ல முடியாது. காரணம் வாழுகின்ற பூமியில் சரிவர வாழாமல் ஒருவன் மத நம்பிக்கை என்ற ஒன்று மட்டும் வைத்து கொண்டு சொர்கத்தில் நுழைந்துவிட முடியாது என்பது சித்தர்களின் உறுதியான எண்ணம். எனவே தான் அவர்கள் சமூகத்தில் இருக்கின்ற கொடுமைகளை நீக்குவதற்கு மனிதன் முதலில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். என் மதம் மட்டுமே உயர்ந்தது என்று எண்ணுவது எப்படி மூடத்தனமனதோ அதே போலவே நான் உயர்ந்த ஜாதி மற்றவர்கள் தாழ்ந்த ஜாதி என்று எண்ணுவதும் ஆகும்.

ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம்

என்று பத்திரகிரியார் இறைவனிடம் முறையிட்டு கேட்கிறார் அதாவது சாங்கிய யோகம் என்ற தத்துவ பிரிவை வேத காலத்தில் உருவாக்கிய கபில மகரிஷி மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமமானவர்களே மனிதர்கள் மட்டும் அல்லாது பறவைகளும் விலங்குகளும் கல் மண் முதலியவைகளும் கூட ஒரே ஆத்மாவின் வடிவமே என்று புரட்சிகரமான ஒரு பாதையை உருவாக்கினார். அந்த பாதையின் படி செல்பவர்களுக்கு மனிதர்களில் ஏற்ற தாழ்வு பார்ப்பது மிகவும் கடினம். எனவே கபிலர் சொன்ன எல்லோரும் சமம் என்ற சித்தாந்தப்படி நடந்தால் மட்டுமே உலகம் உருப்படும் என்று பட்டினத்தாரின் சீடரான பத்திரகிரியார் நினைக்கிறார். நினைவை நிஜமாக்க இறைவனிடமும் முறையிடுகிறார். இதே கருத்தை

சாதியாவது ஏதடா சலந்திரண்ட நீரெல்லாம் பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ காதில் வாளி காரைகம்பு பாடகம்பொன் ஒன்றலோ சாதிபேதம் ஒதுகின்ற தன்மையென்ன தன்மையே

என்று சிவவாக்கியரும் ஜாதிதன்மையை தெளிவாக புரியும் படி விளக்கி ஜாதியின் ஏற்ற தாழ்வுகளை தவறு என்று நமக்கு காட்டுகிறார். அதாவது காதில் போடுகிற கம்மல் கழுத்தில் அணிகின்ற அட்டியல் பாம்படம் கைகாப்பு என்று ஆபரணங்கள் பலவகையாக இருதாலும் அவை அனைத்தும் தங்கம் என்ற ஒரே மூல பொருளிருந்து உருவானது ஆகும். அதே போல மனிதர்களில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற குண பேதங்கள் மாறி மாறி அமைந்திருந்தாலும் அவர்கள் அனைவரும் அடிப்படையில் மனிதர்களே சமமாக பார்க்க பட வேண்டியவர்களே ஆகும் என்பது சிவவாக்கியரின் சீரிய கருத்தாகும்.

கடவுள் நம்பிக்கை என்பது மனிதனுக்கு அவசியமான ஒன்று என்பதில் சித்தர்கள் சந்தேகப்பட வில்லை அதே நேரம் கடவுள் நம்பிக்கையால் மற்ற மனிதர்களை எந்த வகையிலும் இம்சை அடைய கூடாது என்பதில் அவர்கள் கருத்தாக இருந்தார்கள் மக்களில் பலர் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்ற போது அவர்களை கவனிக்காமல் கோவில்களில் அபிசேக ஆராதனைகள் செய்வது வீணானது இறைவனை போய் அத்தகைய வழிபாடுகள் எப்போதுமே சேராது என்ற உயர்ந்த தத்துவம் சித்தர்கள் மத்தியில் இருந்தது.

படமாட கோயிற் பகவர்க்கு ஒன்று ஈயின்
நடமாட கோவில் நம்பர்கங் காகா நடமாடும்
கோவில் நமபர்கென்று ஈயில் படமாட கோவில்
பகவர்க்கு அது ஆமே

என்று திருமூலர் ஒரு புதிய சித்தாந்தத்தை மனித குலத்திற்கு முதல் முறையாக வகுத்து தருகிறார். அதாவது இறைவனுக்காக பொன்னும் பொருளையும் படைத்தால் அது அடியார்கள் என்ற பக்த ஜனங்களை போய்சேராது. மாறாக எளியவர்களுக்கு என்று வழங்கப்படும் பொருள்கள் கண்டிப்பாக இறைவனுக்கு போய்சேரும் என்று திருமூலர் சொல்லத்தை ஆழமாக ஆராய்ந்தால் உலகில் பொதுவுடைமை என்ற கொள்கை எங்கே இருந்து அது முதல் முறையாக தோன்றியது என்ற உண்மை



e-magazine
aanmeegamalar.com

தெளிவாக நமக்கு தெரியும்.

திருமூலர் வழிபாடு நடத்துவதற்காக பெரிய பெரிய கோவில்களை கட்டுவதை அடியோடு வெறுத்தார். எங்கும் நிறைந்த இறைவனுக்கு கோவில்கள் பெரிய அளவில் அமைத்து நீ இங்கே அமர்ந்திரு என்று கட்டளை போடுவது மிக பெரிய அறியாமை எனவே அத்தகைய அறியாமை செயல்களை நிறுத்தி விட்டு கடவுள் இருக்கும் இடம் எதுவென்று உனக்குள் தேடு உன் உடம்பே கடவுளின் ஆலயமாக இருப்பதை அறிவாய் என்று தெளிவாக சொல்கிறார்.

உள்ளம் பெருங்கோவில் ஊன்உடம்பு ஆலயம் வள்ளல் பிரானருக்கு வாய்கோபுர வாசல் தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம் கள்ளப் புலன்ஐந்தும் காளாமணி விளக்கே

இது திருமூலரின் புகழ்பெற்ற பாடல். உள்ளத்தில் தெளிவு ஏற்பட்ட பிறகு வஞ்சகம் செய்கின்ற ஐந்து புலன்கள் கூட இறைவழிபாட்டிற்கு உதவும் மனியோசையை ஒலிக்க செய்யும் பணியாளர்களாக மாறுவார்கள் மனிதனின் உடம்பே கோயிலாகவும் வார்த்தைகளை பேசும் வாய் கோபுர வாசலாகவும் உயிர் என்ற ஜீவனே மூல கருவறையின் சிவலிங்கமாகவும் திகழும் இப்படி திகழ்ந்தால் மட்டுமே இறைதரிசனம் என்பது முழுமையாக பெற்றுவிட்டோம் என்பதாகும். அதை விட்டு விட்டு அதாவது ஆன்ம தெளிவு பெற செய்ய வேண்டிய பணிகளை விட்டு விட்டு ஆலயம் எழுப்புதல் கும்பாபிஷேகம் நடத்துதல் போன்றவைகள் செய்தால் எந்த பயனும் இல்லை என்கிறார். தேரிழுத்து திருவிழா கண்டு ஊரே கொண்டாடுவது சரீரத்திற்கு இன்பம் தருவதாக இருக்குமே தவிர உடம்பில் உள்ளே உறைகின்ற ஆத்மாவிற்கு தெளிவு தருவதாக இருக்காது. எனவே புறகாரணங்களை பற்றி கொண்டு செயல்படாமல் அககாரணத்தை கருத்தில் கொள்வதே சிறந்தது என்பது திருமூலரின் கருத்தாகும்.

இறைவனுக்காக ஆலயங்கள் சமைப்பதும் வானளாவி உயர்ந்து நிற்கும் மலைகளை குடைந்து சிற்ப கூடங்கள் அமைத்தலும் தங்கம் மற்றும் வெள்ளி போன்ற உலோகங்களால் ஆலய கூரைகளை அலங்கரிப்பதும் இறைவனை இறை அன்பை பெறுவதற்கான வழிகள் இல்லை என்றால் பிறகு எப்படி இறைவனை நெருங்குவது. மனித பிறப்பின் இறுதி முடிவான இறைவனின் பாதார விந்தங்களை எப்படித்தான் சரணடைவது என்று கேள்விகள் யாருக்காவது தோன்றினால் அவர்களுக்கு உள்ளம் தெளிவடைய திருமூலர் ஒரு பதிலை தருகிறார். ஆலயம் வேண்டாம் என்று சொல்லவில்லை ஆடம்பரத்தை வெளிபடுத்துவதற்காக ஆலயங்களை நிர்மாணிப்பது சரியல்ல என்பதே என் கருத்து பூஜைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் நமது ஆணவத்தை வளர்க்காமல் அன்பையும் கனிவையும் இறைவன்பால் கொண்ட காதலையும் வெளிபடுத்துவதாக இருக்க வேண்டும். மற்றவர்கள் பெருமையாக பேசவேண்டும் என்பதற்காக தங்க கட்டிகளை இறைவனுக்கு படைப்பதற்கு பதில் உள்ளன்போடு கபடம் இல்லாத மனதோடு ஒரு சிறிய பச்சிலையை கூட அவனுக்கு சமர்ப்பணம் செய்தால் அவன் அதை முழு மனதோடு ஏற்றுகொல்வான் என்ற கருத்தில் யாவருக்குமாம் இறைவற்கொரு பச்சிலை என்று அழகாக சொல்கிறார்.

திருமூலரே புறகாரணங்கள் புறச்செயல்பாடுகள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் இனி நான் கோவிலுக்கு போக வேண்டிய அவசியம் இல்லை ஒழுக்கம் நியாய தர்மங்களை முன்னெடுத்து செல்ல வேண்டிய தேவையும் இல்லை. எனது உடம்பே அவன் உறைகின்ற ஆலயமாக இருக்கும் பொழுது அவனை தேடி வெளியில் அலைவதும் வீண் உள்முகமாகவே செயல்பட்டால் போதுமானது என்ற முடிவிற்கு யார் வந்தாலும்

இந்த உடம்பு என்பது உணர்சிகளால் நிரம்பி வழியும் ஒரு அசிங்கமான பாத்திரம் அற்ப மோகத்திற்காக உணர்சிகளை கொந்தளிக்க செய்து நம்மை பாதாள படுகுழியில் வீழ்த்த கூடிய ஒரு கொடூர ஆயுதம் எவ்வளவு விரைவில் இந்த உடம்பை பட்டினி போட்டு விரதமிருந்து நைந்து போக செய்கிறோமோ அந்த அளவு மோச்ச ராஜ்யத்தை நோக்கி ,மனிதன் நடைபோட முடியும் எனவே உடம்பை அலச்சிய படுத்து அதை பேணுவதை கைவிட்டு விடு என்று யார் சொன்னாலும் இந்த இரு கருத்துகளையும் தவருதலானது அபாயகரமானது என்பதை விளங்கவைக்க திருமூலர்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் திடம்படு மெய்ஞானம் சேரவும் மாட்டர் உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

e-magazine
aanmeegamalar.com

என்று தெளிவான பதிலை நமக்கு தந்து சந்தேகங்களை போக்குகிறார். நீ உடம்பை பட்டினி போட்டு விரதங்களால் சக்கையாக பிழியப்பட்டு இறைவனை அடைய முடியும் என்று நினைக்காதே உடம்பை அழித்து உயிரை வளர்க்க எவராலும் இறைவனது பாத நிழலை கூட பார்த்துவிட இயலாது எனவே ஐயம் தெளிவடைய ஆண்மையோடு மனதை ஒருநிலைபடுத்த வாழ்வில் ஏற்படும் சகலவிதமான தாக்குகதல்களுக்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் உடம்பை பலபடுத்தி கொள் என்பதே திருமூலரின் கருத்தாகும்.

உடம்பை வளர்த்தால் போதும் ஆத்மா தானாக வளர்ந்து விடும் எனவே நாம் உடம்பை வளர்க்க ஆனந்தபடுத்த வாழ்வில் உள்ள அனைத்து இன்பங்களையும் நுகர்ந்து சுகம் பெற உடல் மட்டும் திடகாத்திரமாக இருந்துவிட்டால் போதும் என்று சிலர் திருமூலரின் கருத்துக்களை தவறுதலாக புரிந்து மிக அபாயகரமான செயல் ஒன்றை செய்துவருகிறார்கள். அதாவது உடம்பிற்கு போஷாக்கையும் உயிருக்கு விஷத்தையும் கொடுத்துவருகிறார்கள்.

குளித்து முடித்து சுத்தமாக இருந்தால் போதும் மகாலஷ்மி வந்துவிடுவாள் என்ற நம்பிக்கையில் இருக்கும் இவர்களை சித்தர்கள் உத்தமர்கள் என்று ஏற்றுகொள்வது இல்லை. உடம்பில் உள்ள அசுத்தங்களை போக்கி அதை ஆரோக்கியமாக வைத்துகொண்டால் மட்டும் போதும் என்ற கருத்து மிகவும் தவருதலானது காரணம் ஒரு மனிதன் இறைவனின் சன்னிதானத்திற்கு போகும் போது ஆடம்பரமாக எல்லோரும் பார்த்து வியக்கும் வண்ணம் போனாலே போதும் இறைவன் அருள் செய்துவிடுவார் என்று நினைப்பதும் தவறு. காரணம் உடல் சுத்தம் மட்டும் ஆண்டவனை ஈர்ப்பது இல்லை. மிக முக்கியமாக மன சுத்தம் வேண்டும் அப்போது மட்டுமே ஒரு சாதாரண மனிதனால் கடவுளை அடைய முடியும் என்பது சித்தர்களின் கருத்தாகும்.

மனதகத்து அழுக்கு ஆறாத
மவுனஞான யோகிகாள்
வனத்தகத்து இருக்கினும்
மனதகர்த்து அழுக்கு
அறார் மனதகத்து அழுக்கு
அறுக்க மவுனஞான
யோகிகாள் முலைதடத்து
இருக்கினும் பிறப்பறுந்
திருப்பாரே

மனதிலே இருக்கின்ற காமம் மோகம் லோபம் கோபம் போன்ற மாச்சரியங்களை கழுவி களையாமல் மனித சஞ்சாரம் இல்லாத வனாந்தரத்தில் சென்று கடுந்தவம் செய்தாலும் எந்தவிதமான பயனும் இல்லை. மனதில் இருக்கும் மாசுகளை அகற்றிவிட்டால் மனைவியோடு படுக்கையில் இருந்தால் கூட சுத்தமான யோகிகள் ஈஸ்வரனை அடைவார்கள். எனவே அறுக்க வேண்டிய பற்று என்பது மன மாசுகள் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். என்று சிவவாக்கியர் சொல்கிறார். இதை தான் திருமூலரும் மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்று பேசுகிறார்.

எனவே இந்து மதத்தில் உள்ள மிக முக்கிய பிரிவாகிய சித்தர் மார்க்கம் புரட்சிகரமான பல தத்துவங்களை தனக்குள் வைத்திருக்கிறது. வளர்ந்து வரும் நாகரீக சமூகத்தில் அநியாயங்கள் எந்த அளவு வளர்ந்து வருகிறதோ அந்த அளவு ஆன்மீக நாட்டமும் வளர்ந்துவருகிறது. அந்த ஆன்மீக நாட்டமானது ஆடம்பரமாகவும் ஆராவாரமாகவும் போய்விடாமல் அமைதியாக ஒரு தெளிந்த நீரோடை போல இறைவனை நோக்கி மட்டுமே செல்ல வேண்டுமென்றால் அதற்கு சித்தர்கள் சொன்ன தத்துவங்கள் நிச்சயமாக கைகொடுக்கும். காரணம் சித்தர்கள் எவரும் இறைவனை வெளியிலே கண்டவர்கள் அல்ல



e-magazine
aanmeegamalar.com

தங்களுகுள்ளயே இறை தரிசனத்தை பெற்று தாங்களே சிவஜோதி பிழம்பாக ஆனவர்கள்.

இறைவன் என்பவன் வெட்டவெளியில் இல்லை கட்டிய கோவிலில் இல்லை உயிரோடு ஒட்டிபிறந்த உடம்புகுள்ளே ஆத்மாவாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறான் என்ற ஞானத்தை முதல் முறையாக உபநிஷத கால யோகிகள் தெளிவுபடுத்தி பொதுமக்களுக்கு வெளிபடுத்தினார்கள். உபநிஷத கருத்தக்களை தங்களது வாழ்வில் அனுபவ படுத்தி பார்த்து அவை அனைத்தும் சத்திய வார்த்தைகளே என்பதை உணர்ந்து நம்மை போன்ற சாதாரண ஜனங்களும் சம்சார சாகரம் என்ற பிறப்பிறப்பு கடலுக்குள் கிடந்தது அவதி படாமல் கரையேற வேண்டும் என்ற எண்ணத்தில் சித்தர்கள் நாம் புரிகின்ற வண்ணம் நமது பாஷையில் சொன்னார்கள் எனவே வேதாந்தம் என்ற உபநிஷத கருத்துக்களே சித்தர்களின் சித்தாந்தமாக வெளிபடுத்தப்பட்டு உலகில் வேறு எந்த மதத்திலும் இல்லாத ஆன்மீக அறிவு தெளிவை விஞ்ஞான பூர்வமாக இந்து மதத்தில் நிலைத்திருந்து வருகிறது என்று உறுதியாக சொல்லலாம்.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திர சத்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே

என்று வள்ளலார் சொல்வதும் சித்தர்களின் உண்மையான இதையத்தின் வெளிபாடே என்று சொல்ல வேண்டும். எனவே இந்து மதத்தின் மகுடத்தில் சித்தர் மார்க்கம் என்பது மிக பெரிய வயிரம் என்பதில் எந்தவித ஐயமும் கிடையாது. சித்தர் தங்களது மார்க்கத்தில் தத்துவங்களை மட்டும் சொல்லவில்லை மருத்தவ விஞ்ஞானம் வானியல் விஞ்ஞானம் தாந்திரிக விஞ்ஞானம் என்று பலவாறு உள்ள விஷயங்களை நமக்கு மிக எளிமையாக தருகிறார்கள் அவைகளை எல்லாம் அலசி ஆராய வேண்டுமென்றால் அதுவே ஒரு தனி நூலாக விரியும்.

நமது நோக்கம் இந்து மதத்தில் சித்தர்களின் சித்தாந்தம் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தி நமது சனாதன தர்மத்திற்கு வளர்ச்சியை தந்திருக்கிறது என்பதை பாப்பது மட்டுமே ஆகும். அதை சிறிதளவு தான் நாம் செய்திருக்கிறோம் என்றாலும் இந்த அளவு மனநிறைவு அடைந்து நமது மதத்தில் உள்ள வேறு பல கருத்துகளை ஆராய்ச்சி செய்ய துவங்குவோம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

போன்: 09442426434


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

# ஆன்மிகமலர் மெயில் புக்



## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# ஒவ்வொரு மாத பௌர்ணமியும் அதற்குரிய பலன்களும்



சித்திரை மாதம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சித்திரை மாத 15வது பௌர்ணமி திதி தேவர்களுக்கு உகந்தது.



சித்திரை மாதத்தின் முதல் நாள்தான் பூமியை ஸ்ரீ பிரம்மா படைத்ததாக புராணம் சொல்கிறது. சித்திரை மாதத்து சுக்ல பட்சத்து வெள்ளிக் கிழமைகளில் ஸ்ரீ பார்வதியை வழிபட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

சித்ரா பௌர்ணமி தினத்தன்று நெய்தீபம் ஏற்றி ஸ்ரீ குபேரன் துணைவியார் ஸ்ரீ சித்ராதேவியை வழிபட்டால் செல்வம் பெருகும்.

சாதாரண நாட்களை விட பௌர்ணமியில் தெய்வ தரிசனம் சிறந்த பலன்களை தரும். பௌர்ணமியில் விரதம் இருந்து வழிபாடு செய்தால் எண்ணற்ற பலன்களை பெறலாம், பௌர்ணமியில் மலை மீது பிரபஞ்ச சக்தி அதிக மாக இருக்கும்.

பௌர்ணமியில் கிரிவலம் வருவது, விரதம் மேற்கொள்வது போன்ற செயல்கள் மனதை தூய்மைப் படுத்துவதாக கூறப் படுகிறது.

பௌர்ணமியில் முழு நிலவு தரும் பிரகாச ஒளி உங்கள் மனதிலும், வாழ்விலும் ஏற்பட பௌர்ணமி வழிபாட்டை நாம் மேற் கொள்ளலாம்.

பௌர்ணமியில் விரதம் இருந்து வீட்டில் விளக்கு ஏற்றி தெய்வத்தை வழிபட, வாழ்வில் சகல வளங்களும் பெறலாம் என்பது ஐதீகம்.

## சித்திரை

இந்த பௌர்ணமி சித்ரா பௌர்ணமியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நாம் முறையாக பூஜை செய்து வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். நைவேத்யமாக எலுமிச்சை சாதம்,

பானகம், ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம் வைக்க செல்வம் நிலைக்கும். தானியம் பெருகும்.

## வைகாசி:

இப் பௌர்ணமி விரதம் செய்தால் பிறவா நிலையை அடையலாம். நைவேத்தியமாக சர்க் கரைப் பொங்கலும், விளாம்பழமும் வைப்பது சிறப் பானது. இதனால் திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடி வரும்.

## ஆனி:

இந்த மாதத்தில் வரும் பௌர்ணமி அன்று விரதம் இருந்து விளக்கேற்றி வழிபட்டு வந்தால், காரிய வெற்றி கிட்டும். எடுத்த காரியங்கள் அனைத்தும் சுபமாக முடியும். நைவேத்தியமாக உளுந்தம் பருப்பு சாதமும், முக்கனிகளையும் படைத்து வழிபடுவது சிறப்பான பலன்களைத் தரும். இந்நாளில் சாவித்திரி பூஜை செய்வது மாங்கல்ய பலம் அதிகரிக்க செய்யும். குழந்தை இல்லாத தம்பதியருக்கு விரைவில் குழந்தை உண்டாகும் என்பது உண்மை.

## ஆடி:

ஆடி மாதம் வரும் பௌர்ணமி மிகவும் விசேஷமானது. அன்றைய தினத்தில் நம் குல தெய்வத்தை நினைத்து, மந்திரங்கள் ஜபித்து, விரதம் அனுஷ்டித்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து, வாழைப்பழத்தை சாதத்துடன் கலந்து நைவேத்தியமாக படைத்து, விளக்கேற்றி வழிபட்டு வந்தால் சகல யோகங்களும் வந்து சேரும். ஆடி மாத பௌர்ணமியிலும் ஸ்ரீ சாவித்திரி விரதம் மேற்கொள்வது சிறப்பான பலன்களை தரும். வடமாநிலத்தவர்கள், கோபத்ம விரதம், ஸ்ரீ சாவித்ரி விரதம் இந்த பௌர்ணமியில்



ஆன்மிகமலர் .காம்
e-magazine
aanmeegamalar.com

மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆவணி:

இந்த பௌர்ணமியில் விரதம் இருப்பது கடன் தொல்லைகள் நீங்க வழிவகுக்கும். இந்த நாளில் ஸ்ரீ அம்பிகையை துதித்து விளக்கேற்றி, நெய் கலந்த சாதத்தை நைவேத்தியமாகவைத்து வழிபாடு செய்தால் செல்வம் பெருகும். மேலோ ங்கி இருக்கும் கடன் பிரச்சனைகள் படிப் படியாக நீங்கும்.

ஆன்மிகமலர்

## புரட்டாசி:

புரட்டாசியில் வரும் பௌர்ணமி அன்றுவிரத மிருந்து திருமாலை வணங்கி, மாவிளக்கு இட்டு. வழிபட்டால் வாழ்வில் சகல நன்மைகளும் நடை பெறும். குடும்பத்தில் ஸ்ரீ லட்சுமி கடாட்சம் உண்டாகும். புராட்டாசி பௌர்ணமிக்கு நைவேத் தியமாக இளநீர் படைப்பது விசே~மானது.

## ஐப்பசி:

ஐப்பசியில் வரும் பௌர்ணமி விரதம் இருந்து வீட்டில் விளக்கேற்றி வழிபட்டு வந்தால் பசி, பிணிகள் நீங்கும். வெண் பொங்கலும், நெய் பொங்கல் படைத்து ஸ்ரீ அம்பிகைக்கு நெய் விளக்கேற்றி வழிபாடு செய்தால் வாழ்வில் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

ஆன்மிகமலர்

## கார்த்திகை:

கார்த்திகை மாத பௌர்ணமியில் வீட்டில் விளக்கேற்றி ஈசனை வழிபட, விரதம் மேற் கொண்டு, சிவன் தலத்திற்கு சென்று வழிபட்டால் பேரும், புகழும் நிலைத்து நிற்கும் . இந்த மாத பௌர்ணமி தீபத் திருவிழாவாக விசே~மாக கொண்டாடப்படுகிறது.

## மார்கழி:

மார்கழி மாதம் வரும் பௌர்ணமியில்; விரதமிருந்து, விளக்கு ஏற்றி வழிபட்டு வந்தால் ஆரோக்கிய பிரச்சனைகள் நீங்கும் உடல் நலம் சீராகும். நைவேத்தியமாக களியை படைத்து வழிபாடு செய்தால் கஷ்டங்கள் நீங்கும். மார் கழி மாதத்தில் வரும் பௌர்ணமி சித்திரை நட்சத் திரத்தில் திருவாதிரை திருவிழா சிறப்பாக கொண்டாடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தை:

செல்வத்தையும், கொண்டாட்த்தையும் கொண்டு வரும் மாதமாக தை மாதம் கருதப் படுகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சியையும், பொங்கல் பண்டிகையுடன் கோலாகலமாக தொடங்கும் தை மாதத்தில் வரும் மற்றொரு முக்கிய பண்டி கை தைப்பூசம் ஆகும். முருகப்பெருமான்



தாரகாசுரனை வதைத்த நாள்தான் தைப்பூசமாக கொண்டாடப்படுகிறது. தைப்பூசம் எப்பொழுதும் முழுநிலவு நாள் அன்றுதான் வரும்.

## மாசி

மாசி மாத பௌர்ணமி தினத்தில் மாசி மகம் நிகழ்வு நடைபெறுவது மிகவும் புனிதமான நாளாகும். நமது ஆன்மாவை தூய்மைப்படுத்தும் காலகட்டமாக இது கருதப்படுகிறது. ஜோதிட சாஸ்திரங்களில் இருக்கும் இருபத்தேழு நட் சத்திரங்களில் இது மிகவும் முக்கியமான நட்சத் திரமாகும். இந்த மாத பௌர்ணமி மனிதர்களின் பாவங்களை போக்கும் பௌர்ணமி என்றும் கூறலாம்.

## பங்குனி

பங்குனி மாத முழுநிலவானது உத்திர நட்சத் திரத்தில் வரும். பங்குனி உத்திரத்தின் சிறப்பு என்னவென்றால் இதுதான் சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் திருமணம் நடைபெற்ற நாளாகும். மேலும் முருகன் மற்றும் தெய்வயானை மட்டும் ரங்கமன்னார் ஆண்டாளின் திருமணமும் பங்குனி பௌர்ணமி தினத்தில்தான் நடைபெற்றது. பங்குனி உத்திரம் என்பது தற்போது உலககெங்கும் உள்ள இந்துக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாளாக கொண்டாடப்படுகிறது.

– எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி, செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

**தரம் மட்டுமே**
**நமது இதழின் தாரகமந்திரம்,**
**வியாபார நோக்கத்துடன் செயல்படும்**
**மற்ற ஆன்மிக இதழுக்கிடையே**
**சேவையை மட்டுமே நோக்கமாக**
**கொண்ட ஒரே தரமான**
**ஆன்மிக இதழ்**

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

**ஒரே கிளிக் 176 இதழ்களையும்**
**டவுன்லோடு செய்து படியுங்கள்**

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ஜகத்தை காக்கும் பூரி ஜகந்நாதர் ஐதராபாத்திலும் காட்சிதரும் அற்புதம்

e-magazine
aanmeegamalar.com

ஜகத்தை ஆளும் அரசன் ஜகன்னாதன், தன் அண்ணன் பலராமர், தங்கை சுபத்திரா உடன் கோவில் கொண்டுள்ளது ஒரிஸா மாநிலத்தில் உள்ள பூரீ என்பதும், இந்தியாவின் கிழக்கே உள்ள இந்த கோவில் பக்தர்களின் அபிமான ஸ்தலம் என்பதும் அனைவரும் அறிந்தது.

பூரீ ஜகன்னாதருக்கு ஐதராபாத், பவானி நகர், பன்ஜாரா ஹில்,ரோட் நெ 12 ல் திருக்கோவில் அமைந்ததை பற்றி காண்போம்.

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊரை விட்டு, இங்கு வந்த ஓடியா மக்கள், தங்களின் மனம் கவர்ந்த ஜகன்னாதருக்கு கோவில் கட்ட முயற்சி செய்ய, அதற்கான காலமும் கனிந்து, வேண்டுதல் பலித்து, கண்ணனின் திருஉள்ளபடி கோவில் அமைந்தது. 2004 ஆண்டு, கோவிலுக்கான இடம் தேர்வு செய்து, ஐந்து ஆண்டுகளில், பூரீ ஜகன்னாதர் கோவிலின் பிரதிபிம்பமாக, அழகிய ஸ்ரீ ஜகன்னாத் கோவில் திருப்பணி 2009 மார்ச் இல் பூர்த்தியானது. 70 அடி உயர “சிக்காரா” எனபடும் ராஜ கோபுரம் 600 டன் எடை கொண்ட சிகப்பு நிற மண் கற்களால் ஆனது. ஒரிஸா மாநில சிற்பிகள் தான் இக்கோவிலை நிர்மாணித்தனர்.

ஸ்ரீஜகன்னாதர், ஸ்ரீ பலராமர் மற்றும் தேவி சுபத்திரா





மூலமூர்த்தங்கள் ஒரிஸாவிலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதாம்.

இக்கோவிலுக்கு நான்கு வாயில்கள். சிம்ம துவாரம், ஹஸ்தி துவாரம், வியாக்ர துவாரம் மற்றும் அஸ்வ துவாரம். வடக்கு வாயில் பரமபத வாசல். கிழக்கு பிரதான சிம்ம வாசல் வழியே, கோவிலின் உள்ளே நுழையும் போது, பாதையின் ஒருபுறம் அழகிய பூந் தோட்டமும் மறுபுறம் வெளிப்புற மதிலில் பூரீஜகன்னாதர் கோவிலின் ஸ்தல புராண வண்ண சித்திரமும் கண்ணை கவர்கிறது.

துவஜ ஸ்தம்பம் வணங்கி, 22 படிகள் ஏறி, அழகிய வேலைப்பாடு கொண்ட, பெரிய தூண்கள் அமைந்த போக மண்டபம், முக மண்டபம் கடந்து, கர்ப்பகிரகத்தை அடைகிறோம். பெரிய மேடையில், வண்ண பட்டு உடுத்தி, சர்வ அலங்காரத்தில், கம்பீரமாக, கொலு வீற்றிருக்கும் ஸ்ரீ ஜகன்னாதர், ஸ்ரீ பலராமர் மற்றும் தேவி சுபத்திராவை தரிசிக்கும் போது மனதில் அமைதியும், ஆனந்தமும் நிறைகிறது.

காசி விஸ்வநாதர், ஸ்ரீகணேஷ், தேவி விமலா (பார்வதி), ஸ்ரீ மகா லட்சுமி, ஸ்ரீ அனுமன் மற்றும் நவக்கிரகங்களுக்கு தனி உபசன்னதிகள் வெளி பிராகாரத்தில் உள்ளன.

கோவிலை சுற்றியுள்ள மதில் சுவற்றில் தசா அவதாரங்கள், கீதோபதேசம், கஜேந்திர மோட்சம், காலிங்க நர்த்தனம், கம்சவதம், ஸ்ரீ கிருஷ்ணரின் பால லீலைகள் அனைத்தும் கண்கவர் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது. இந்த அழகு ஓவியங்களை மின்விளக்கின் ஒளியில் காண்பது கண்ணுக்கு விருந்து. எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் பக்தி பாடல்களை கேட்பது காதிற்கு விருந்து. போக் எனபடும் மகா பிரசாதம் நாவிற்க்கும், வயிற்றுக்கும் விருந்து.

மாலை நேரம் சூரிய ஒளியில் மின்னும் கோபுர அழகையும், பின் மின்விளக்கில் ஜொலிக்கும் கோபுர தரிசனத்தையும் ஒருசேர காண்பது மனதிற்கு விருந்து.

இங்கு அனைத்து பண்டிகைகளும் வெகு விமரிசையாக கொண்டாடபடுகிறது. வரும் ஜூலை மாதம் 7 ந் தேதி நடைபெற உள்ள ரத யாத்திரையில் பங்கு கொண்டு, ஐதராபாத்தில் கோவில் கொண்டுள்ள ஸ்ரீ ஜகன்னாதரை வணங்கி அவர் அருள் பெறுவோம்!!!

கோவில் தரிசன நேரம்

காலை 6 மணி முதல் 11 மணி வரை

மாலை 5மணி முதல் இரவு 9 மணி வரை

– ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036. Telengana

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்**மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**173** க்கும் மேற்பட்ட

இதழ்களை

**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.









# விஷ பயம் நீக்கும் ஜெயங்கொண்டீஸ்வரர்

"நம்பினார்க்கு நடராசன்" என்கிற முதுமொழி என்றும் பொய்க்காது.

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்பதற்கு ஓர் உதாரணத் தலமாக திகழ்கிறது நத்தக்காடையூர்.

கொங்கு நாட்டிலே சோழர்களின் ஆட்சி பலகாலம் நீடித்தது. சோழர்களது ஈடு இணையில்லா சிவபக்தியின் காரணமாக இந்த கொங்கு தேசத்தில் 27 சிவாலயங்களை சோழர்கள் ஸ்தாபித்துள்ளனர். இதன் காரணமாக இந்த 27 சிவாலயங்களிலும் சிவபெருமான் ஸ்ரீ சோளீஸ்வரர் என்றே அழைக்கப்படுகின்றார்.

இராஜராஜச் சோழனின் பல்வேறு பட்டப் பெயர்களுள் ஒன்று "ஜெயங்கொண்டான்".

இராஜராஜச் சோழன் இந்த நத்தக்காடையூர் திருத்தலத்தில் நிறுவிய சிவபெருமான் இவரது பட்டப்பெயரால் ஸ்ரீ ஜெயங்கொண்டீஸ்வரர் என்று போற்றப்படுகின்றார்.



e-magazine
aanmeegamalar.com







e-ma

aanmeegamalar.com

காங்கேயன் என்கிற குறுநில மன்னன் சோழர்களின் கட்டுப்பாட்டில் இப்பகுதியை ஆண்டு வந்தான். இதனால் இப்பகுதி காங்கேய நாடு என்று அழைக்கப்பட்டது. இந்த காங்கேய நாட்டிற்கு உட்பட்டதாக நத்தக்காடையூர் திகழ்ந்துள்ளது.

பின்னர் 1708 ஆம் ஆண்டில் இக்காங்கேய நாட்டை ஆட்சி செய்தார் கொன்றைவேல் சர்க்கரை மன்றாடியார்.


இவர் ஆட்சி செய்யும் காலத்தில் இங்குள்ள ஜெயங்கொண்டீஸ்வரர் ஆலயத்தைத் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்தினார். சிறந்த சிவ பக்தரான இவர் இச்சிவாலய திருப்பணியில் ஈடுபட்டிருந்தபோது, வேலையாள் ஒருவன் தண்ணீர் எடுத்து வர சென்றபோது அவனைப் பாம்பு கடித்து விட்டது. அவன் அலறிக்கொண்டே ஓடி வந்து, கோவிலின் முன்னே மயங்கி விழுந்தான். அவன் வாயில் நுரை தள்ளியது.

விஷயம் அறிந்து, அங்கு ஓடி வந்தார் கொன்றவேல் சர்க்கரை மன்றாடியார். சிவாலயத்









திருப்பணிக்கு என்ன தடையோ ??என்று பயந் தார். உடன் ஆலயத்திற்குள் சென்று ஒரு கைப் பிடியளவு விபூதியை எடுத்து வந்து.....

“ஜெயங்கொண்ட நாதரே !
நமச்சிவாய
பயம் கொண்ட பாம்பு விஷம்
இறங்கவே! சிவ சிவ

...என்று சொல்லியபடியே அவனது உடம்பு முழுதும் பூசி விட்டார். 28 முறை இவ்வாறு ஜபித்தபடியே விபூதியைப் பூசினார்.

பாம்பு கடித்து இறந்து கிடந்தவன், உடம்பில் உயிர் வந்தது. கண்விழித்துப் பார்த்தான். அவனது உடம்பில் ஏறிய பாம்பின் விஷம் முழுவதும் இறங்கியது. தூங்கி எழுந்தவன் போல் எழுந்து நின்றான். பலரும் இந்த அற்புத நிகழ்வைக் கண்டு அதிசயித்து நின்றனர். மன்றாடியாரோ ஆண்ட வனை வணங்கி பேரானந்தம் அடைந்தார்.

நெடுஞ்சாலைக்கு மேற்கே ஆலயம் அழகுற அமைந்துள்ளது. ஆலயத்திற்கு வெளியே பிரம் மாண்டமான இரண்டு தீப ஸ்தம்பங்கள் எழுந்து நிற்கின்றது. இதன் கீழே இராஜராஜச் சோழனது திருவுருவம் வடிக்கப்பட்டுள்ளது.

இராஜகோபுரம் காணப்படவில்லை. உள்ளே பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்தி மண்டபம் உள்ளன. நேராக சில படிகள் ஏறிச் சென்றால்.... இறைவன் சன்னிதி வருகிறது. கருவறையுள் கருணாதயாளராய் அருட்காட்சி அளிக்கின்றார் ஸ்ரீ ஜெயங்கொண்டீஸ்வரர்.

சுவாமி சன்னிதிக்கு இடப்பக்கம் அம்பாள் சன்னிதியும், பக்கத்தில் ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சன்னிதியும் அடுத்தடுத்து அமைந்துள்ளது. அம்பிகையாக ஸ்ரீ சௌந்தரநாயகி நின்றவண்ணம் அருள் புரிகின் றாள்.

தென்மேற்கில் கணபதி சன்னிதியும், வடமேற்கில் பாலசுப்ரமணியர் சன்னிதியும் அமைந்துள்ளன. வடபாகத்தில் தெற்கு நோக்கிய அனுமன் சன்னிதியும், ஈசான பாகத்தில் ஸ்ரீ பைரவரும் சன்னிதி கொண்டுள்ளனர். நவக்கிர கங்களும் உடனுள்ளன.

பழையகோட்டை மன்றாடியார் நிர்வாகத்திற்கு உட்பட்ட இவ்வாலயத்தில் அனேக சிவாலய விசேடங்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன. இரண்டு கால பூஜைகள் நடந்திடும் இவ்வாலயம் தினமும் காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையும் திறந் திருக்கும்.

இத்தல வழிபாட்டினால், விஷத்தால் உண் டான வியாதிகள் குணமடையும். தொழிலில் ஏற் படுகின்ற தடைகள் நீங்கும். தடைபட்ட மங்கள நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறும்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் இருந்து அரச்சலூர் வழியாக ஈரோடு செல்லும் சாலையில் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது நத்தக்காடையூர்.

– பழங்காமூர் மோ.கணேஷ்
தொடர்புக்கு: 9789156179
பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.



மோ.கணேஷ்

e-magazine
aanmeegamalar.com

# தொன்மையான
# முருக வழிபாடு



முருகு அல்லது முருகன் என்னும் சொல் மிகமிகத் தொன்மையானது. 'முருகு' என்ற சொல்லுக்கு அழியாத அழகும், குன்றாத இளமையும், இயற்கை மணமும், எல்லாப் பொருள்களிலும் கடவுள் தன்மை உண்டு என பல பொருள்கள் உண்டு. 'மு' என்பதுதிருமாலையும் 'ரு' என்பது சிவபெருமானின் அம்சத்தையும் 'க' என்பது பிரம்மனையும் குறிக்கும் என்பர்.

அதுபோல உருவ வழிபாட்டில் தொன்மையானதும் முருகன் வழிபாடாகும். முருகன் குறிஞ்சி நிலக்கடவுள், மலையும் மலை சார்ந்த இடங்களின் கடவுள் முருகன். அதனால் முருகனைக் 'குறிஞ்சிக் கிழவன்' 'மலைகிழவோன்' என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. மனித இனம் முதன் முதலில் தோன்றிய இடம் குறிஞ்சி நிலமாகும். ஆகவே முதன் முதலில் மக்கள் குறிஞ்சி நிலத்திலேயே தெய்வ வழிபாடு தொடங்கினார்கள். ஒரு குழந்தை வடிவம் படைத்து அதை கடவுளாக வழிபாடு செய்தது முருகன் வழிபாடு என சொல்கிறார்கள்.

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினான் என்பது வரலாறு. மேலும் சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான். தமிழின் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாகவும், தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் விளங்கும் எழுத்துக்கள் ஆறும் முகங்களாகவும், தனி நிலை எனப்படும் ஆயுதமே ஒப்புயர்வற்றுத் திகழும் வேலாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவாக விளங்குகின்றான்.

ஞானமே உடலாகவும், இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்னும் முச்சக்திகளே மூன்று கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் கொண்டு நிற்கும் ஒப்பற்ற தனிச்சுடராகத் திகழ்பவன் முருகன்.

அவனுடைய ஆறு திரு முகங்களில் உலகுக்கு ஒளியையும் ஆன்மாக்களுக்கு அழியாத பேரின்ப ஒளியையும் தருவது ஒரு முகம்.

ஆன்மாக்களுக்கு எல்லாம் அவற்றின் வினைகளைப் போக்கி வேண்டும் வரங்களை அளிப்பது ஒரு முகம். வேள்விகள் வேத ஆகமச் சடங்குகள் இவற்றை ஐயமின்றி முற்றுப் பெறச் செய்வது ஒரு முகம்.

முனிவர்களுக்கு நூற்பொருளை விளக்குவது ஒரு முகம். நேசமுடன் போகம் நுக ரும் வள்ளி தெய்வானை அம்மையர்க்கு மோகம் தருவது ஒரு முகம்.

அசுரரை அழித்துக் களவேள்வி செய்கிறது ஒரு முகம். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவம் கொண்டவன் முருகன். முருகன் ஒரு தொகுப்புத் தெய்வம். முருகனை வணங்கினால் பல கடவுளரை வணங்கி அடையும் பயன்களை எல்லாம் நாம் ஒருங்கே பெறலாம். மகனுக்குச் செய்யும் சிறப்பால், தந்தை தாயாகிய சிவபிரானும் உமாதேவியும், தம்பியைப் போற்றுதலால் சகோதரனாகிய விநாயகரும், மருமகனை வழிபடுதலால் மாமனாகிய திருமாலும், தலைவனை வணங்குதலால் தேவரும், முனிவரும் ஆகிய அனைவரும் மகிழ்ச்சி அடைவர். எனவே முருகன் வழிபாடு மிக்க சிறப்புடையது.

முருகனை அன்புடன் வழிபட்டு முருகா முருகா என கூறித் தியானிப்பவர்கள் என்றும் குறையாத பெருஞ்செல்வத்தைப் பெறுவார்கள், அவர்களை ஒருபோதும் எத்தகைய துன்பமும் அணுகாது.

– எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**பஜன்மண்டலியினர்,**

**ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,**

**ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,**

**கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,**

**அன்னதானம் செய்பவர்கள்,**

**பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்**

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

**வாட்சப் எண்: 9444228203**

# 28வது லட்சுமி நரசிம்ம ஜெயந்தி 3-நாள் உற்சவம் சென்னையில் முடிவடைந்தது





e-magazine
aanmeegamalar.com

சென்னையை தளமாகக் கொண்ட விசங்கிர்த் தலி அறக்கட்டளை, அதன் 28வது லக்ஷ்மி நரசிம்ம ஜெயந்தி உற்சவம், 21 முதல் 23 ஜூன் 2024 வரை, சென்னை, அடையாறில் உள்ள அனந்த பத்மநாபசுவாமி கோவிலின் ஸ்ரீ காஞ்சி மகா சுவாமி அனந்த மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

அறக்கட்டளை கடந்த காலங்களில் சென்னைக்கு செல்வதற்கு முன்பு தலைநகரில் 25 ஆண்டுகளாக உற்சவத்தை ஏற்பாடு செய்தது. இந்த ஆண்டு 28வது ஆண்டு கொண்டாட் டங்கள் சென்னையில் தொடர்ந்து 3 வது ஆண்டு நடந்தது.

இந்த அறக்கட்டளை 1969–இல் ஸ்ரீ விபி சாஸ்திரிகளால் நிறுவப்பட்டது. டெல்லி ஸ்ரீசங்கர் பாகவதர், (ஓய்வு., துணைத் தலைவர், ரிலையன்ஸ் ஏடிஏஜி (சாஸ்திரிகள் மகனும் கூட) தற்போது அறக்கட்டளை அதன் நிர்வாக அறங்காவலராக நிர்வகித்து வருகிறார். மற்ற அறங்காவலர்கள் ரகுராமன் பங்குதாரர் வி சங்கர் ஐயர் மற்றும் நிறுவனம், ஸ்ரீ ஸ் ராமசேஷன், ஸ்ரீ வி எம் சுந்தரம், மற்றும் ஸ்ரீ கணேசன் சுந்தரம் ஆகியோர், அதன் மற்ற அறங்காவலர்கள்.



எஸ்.வெங்கடேசன்

உற்சவத்தில் மதுரை ராஜ ராஜேஸ்வரி பீடம் – ஸ்ரீ (பி பி) ராமானந்த சரஸ்வதி சுவாமிகள், புதுக்கோட்டை ஸ்ரீ நரசிம்ம பாகவதர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஸ்ரீ மும்பை சுந்தரராமன், ஸ்ரீ தஞ்சாவூர் தியாகராஜன், ஸ்ரீ சீர்காழி சட்டநாதர், ஸ்ரீ கோவிந்தபுரம் ஞானேஷ்வர், ஸ்ரீ மோகனூர் ஸ்ரீகாந்த் கௌண்டின்யன், ஸ்ரீ மேலார்கோடு ரவி மற்றும் ஸ்ரீ ஈரோடு ராஜாமணி போன்ற முக்கிய பாகவதர்கள் பங்கேற்றனர். டெல்லி ஸ்ரீ சங்கர் பாகவதர் சம்பிரதாய சீதா கல்யாணம் மற்றும் லக்ஷ்மி நரசிம்ம கல்யாணம் மூலம் தெய்வீக நாமசங்கீர்த்தனத்துடன்

நிறைவுற்றது. பிரவசன விரிவுரையாளர் ஸ்ரீ துஷ்யந்த் ஸ்ரீதர், தனது சிறந்த பேச்சுத்திறன் மூலம் அனைத்து வயதினரையும் கவர்ந்தார்.




சனாதன தர்மத்திற்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, விசங்கிர்த்தலி டிரஸ்ட் ஸ்ரீ துஷ்யந்த் ஸ்ரீதருக்கு “தர்ம சம்ரக்ஷன கைங்கர்ய ரத்னம்” என்ற பட்டத்தையும், பாகவத சகோதரர்களான ஸ்ரீ விஜய் கிருஷ்ணா பாகவதர், மற்றும் ஸ்ரீ பாலாஜி பாகவதருக்கு “நாமசங்கீர்த்தன கைங்கர்ய ரத்னம்” என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது. பாராட்டு விழாவுக்கு தஞ்சாவூர் சமஸ்தானத்தின் தற்போதைய தலைவரான சோழதேசாதிபதி ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ பாபாஜி ராஜா தலைமை தாங்கினார்.

முந்தைய ஆண்டுகளில், அறக்கட்டளை ஸ்ரீ ஜே சாய் தீபக் (வழக்கறிஞர், உச்ச நீதிமன்றம்) “தர்ம சம்ரக்ஷனா கைங்கர்ய ரத்னம்“ என்ற பட்டத்தையும், இண்டிக் கலெக்டிவ் ட்ரஸ்ட்டிற்க்கு “ஆலய சம்ரக்ஷனா கைங்கர்ய ரத்னம்“ மற்றும் “நாம சங்கீர்த்தன கைங்கர்ய ரத்னம்“ என்ற பட்டத்தை புதுக்கோட்டை நரசிம்ம பாகவதருக்கு வழங்கியது. பாகவதர்கள், அந்தந்ததுறைகளில் அவர்களின் தன்னலமற்ற பங்களிப்பை அங்கீகரித்தார்கள்.

அறக்கட்டளையானது, இவ்வருடம், ராடெல் எலக்ட்ரானிக்ஸ், என்ஏசி ஜூவெல்லர்ஸ், ஈக்விடாஸ் வங்கி மற்றும் பிரக்ருதி வும்மிடி பங்காரு அடையாறு ஆகியவற்றின் சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, விசங்கிர்த்தலி அறக் கட்டளைக்கு வழங்கிய ஆதரவிற்க்கு நன்றி தெரிவித்தது. மூன்று நாட்கள் நடந்த உற்சவத்தில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

## புது தில்லி சாலிமார் பாக் ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் ஏகாதச ருத்ர பாராயணம்

அக்னி நட்சத்திரம் கடும் தோஷம் குறைந்து, தில்லி மாநகரம் குளிர்ச்சி அடையவும், உலக மக்கள் நலம் பெற வேண்டி, சாலிமார் பாக்கில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் ஜூன் 16ம் தேதி காலை கணபதி பூஜையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. இதைத் தொடர்ந்து, சங்கல்பம், புண்யாஹவசனம், கலச ஸ்தாபனம், லகுன்யாஸ ஸ்தோத்திரம், ஏகாதச ருத்ர ஜபம், ஸ்ரீருத்ரநாம த்ரிஸதீ நாமார்ச்சனை நடைபெற்றது. எஸ். கே. மூர்த்தி வாத்தியார் தலைமையில்

ரித்விக்குகள் பலர் இதில் பங்கேற்று பதினொரு ஆவர்த்தி ஏகாதச ருத்ரம் பாராயணம் செய்தனர். இதையடுத்து, பூஜிக்கப்பட்ட கலசத்தில் இருந்த புனித நீரினை எடுத்து மீனாக்ஷி சமேத சுந்தரேஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சன்னதிகள் சிறப்பு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

பிரதி மாதம் மூன்றாம் வாரம் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஏகாதச ருத்ர ஜபம் பாராயணம் இக்கோயிலில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

– டெல்லி தியாகராஜன்
9868423215



# உலகின் உண்மையான அறிவைப் பெறுகிறவன் பக்தன்

சீடன்: தொண்டர்கள் என்பவர்கள் யார்?
ஞானி: கடமையைச் செய்தவர்கள்.
சீடன்: தொண்டில் சிறந்தது எது?
ஞானி: வழி காட்டியாகச் செய்யும் தொண்டு.
சீடன்: மனிதன் பக்தியைக் கொள்வது எப்போது?
ஞானி: தேவை என உணரும்போது.
சீடன்: இறையுணர்வு எப்பொழுது வரும்?
ஞானி: அது இயக்கமாக தானாக வளர வேண்டிய ஒன்று.
சீடன்: அதற்கு செய்ய வேண்டியது என்ன?
ஞானி: முதலில்ஒரு வழிகாட்ட குருவைத் தேடு,
சீடன்: சிந்தனையாளன் என்பவன் யார்?
ஞானி: சார்புடைய எண்ணங்களுக்கு கட்டுப்படாதவன்.
சீடன்: ஒழுக்கம் என்றால் என்ன?
ஞானி: முதலில் உன்னைத் தெரிந்து கொள்வது.
சீடன்: பக்தி மார்க்கம் எப்பொழுது தெரியும்?
ஞானி: மனம் சிரிக்கும் போது.
சீடன்: நல்ல மனிதன் யார்?
ஞானி: உள்நோக்கம் இல்லாதவன்.
சீடன்: இறைவன் மனிதனிடம் எதிர்பார்ப்பது என்ன?
ஞானி: கடவுள் மனிதர்களிடம் மொத்த அபிப் பிராயத்தையோ தனிப்பட்ட அபிப் பிரயாங்களையோ எதிர்ப்பார்ப்பதில்லை.
சீடன்: மதங்கள் ஏன் தோன்றின?
ஞானி: தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு.
சீடன்: ஆசாரம் என்றால் என்ன?
ஞானி: கொள்கையைக் கடைப் பிடிக்கும் தன்மை.
சீடன்: முடிவு எடுப்பது எப்படி?
ஞானி: படிப்பதற்கு முன்னால் முடிவு செய்யாதே. படித்து அறிந்து முடிவு எடுப்பவன் பாதியில் ஓடிவிடுவான்.
சீடன்: ஞானம் நம்பிக்கையினால் வருமா?
ஞானி: தாராளமாக. நம்பிக்கை உயிருக்கு பயன் தரும் என்று எண்ணும்பொழுது.
சீடன்: குருநாதர்களிடமிருந்து இந்த ஞானம் வர முடியுமா?
ஞானி: பணக்காரனிடம் இருந்து பணம்வரும் என்ற நம்பிக்கையே மனிதனுக்கு வரும்போது கருணையே உருவான ஞானிகளிடமிருந்தும், பக்தர்களிட மிருந்தும் ஞானமும் பக்தியும் ஏன் வராது?
சீடன்: உலக நெருக்கடியை தீர்க்க ஞானிகளின் அறிவுரை என்ன?
ஞானி: உலக மக்கள் அனைவரும் கடவுளிடம் அன்பு செலுத்தி பக்தி செய்தால் நெருக்கடி தீரும். பக்தியின்மையே நெருக்கடிக்கு காரணம்.
சீடன்: கடவுள் பெயரைச் சொன்னால் மட்டும் போதுமா?
ஞானி: முருகா, இராமா என்ற பெயர்கள் சிறிய விளக்காகத் தோன்றலாம். நம்பிக் கையுடன் உணர்ந்தால் அதுவே கோடி சூரிய ஒளி.
சீடன்: தெய்வீகம், லௌகீம் என்ன வித்திய ாசம்?
ஞானி: சிந்தனை, மனம், புத்தி, சித்தத்து டன் கலந்து செயல்படும் போதுதெய் வீகம். இந்திரியங்களு டன் மூளை கலந்து செயல்படும்போது லௌ கீகம்.



சீடன்: பக்தன் என்பவன் யார்?
ஞானி: உலகின் உண்மையான அறிவைப் பெறுகிறவன்.
சீடன்: இதற்கு குரு தேவையா?
ஞானி: ஆண்டவனிடம்மனதை வைக்கும் பயிற்சியை எங்கு பெறு

e-magazine
aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

e-magazine
aanmeegamalar.com

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

கிறான் என்பதே முக்கியம். அந்த இடமே குருகுலம்.

சீடன்: குருநாதன் என்பது யார்?

ஞானி: எல்லாவற்றிற்கும் முடிவு இருக்கிறது, தெளிவு இருக்கிறது என்று சொல்பவனே குரு.

சீடன்: பிரம்மச்சாரியாக இருந்தால்தான் சாதகனாக முடியுமா?

ஞானி: எந்த ஆசிரமம் ஆனாலும் அதன் உண்மையை உணராமல் வாழ்பவன் கஷ்டப்படுவான்.

சீடன்: இதில் கருத்து வேற்றுமை வருமா?

ஞானி: வராது. வல்லவனுக்கு வல்லவன் என்ற சண்டைவரும். பக்தனுக்கு பக்தன் என்ற சண்டைகிடையாது.

சீடன்: உலக வாழ்க்கை முக்கியமில்லையா?

ஞானி: இது பொருள் உலகம் என்பதால் உலக முக்கியத் துவத்தைப் பற்றி எல்லோரும் தான் சொல்கிறார்கள். பொருள்கள் மத்தியில் இருக்கும் பரம்பொருளை உணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

சீடன்: அப்படியனால் கிருகஸ்தாஸ்ரமும் முக்கியமானதுதானே?

ஞானி: ஒவ்வொரு ஆசிரமத்திலும் ஒரு பொருள் முக்கியத் துவம் வாய்ந்தது. அந்த பொருள் இல்லாத வரை அந்தஆசிரமம் சிறக்காது. அந்த பொருளைஉணர்ந்து அமைதி அடைய வேண்டும்.

சீடன்: உலக ஆசை அகல மறுக்கிறதே?

ஞானி: நாக்குச் சபலம் நீங்கினால் வாக்கு பலிதம் ஏற்படும்.

சீடன்: இறைவனை அடைய பூஜை வழிபாடுகள் அவசியமா?

ஞானி: ஒரு மொழியைத் தெரிந்து கொள்ள அதன் அடிப்படை எழுத்துக்களைப் புரிந்து கொள்ள வேண்டாமா?

சீடன்: கடவுளுக்கும், சிந்தனைக்கும் என்ன தொடர்பு?

ஞானி: சிந்தனையில் வைத்துக் கொண்டிருந்தால் கடவுளின் விளக்கம் தெரியாது.

சீடன்: பின் எப்படி இருந்தால் விளங்கும்?

ஞானி: ஞானமாய் சொல்வது ஞானமாகவும், யோகமாய் சொல்வது யோகமாகவும் தெரிந்தால் விளங்கும். இப்பொழுது இவையெல்லாம் சிந்தனையாக அறிவாகத் தான் தெரிகிறது.

சீடன்: உபதேசம் என்றால்?

ஞானி: உங்களிடம் ஒன்றும் இல்லைஎன காட்டிக் கொடுப்பது..

சீடன்: அறியாமை என்றால்?

ஞானி: உங்களிடம் எல்லாம் இருக்கிறது என்று சொல்லி குரு புரிய வைப்பது.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## திருமண வரன், குழந்தை பேறு குழந்தைகளுக்கு கல்வியை தந்தருளும்

# அகத்தீஸ்வரர் ஆலயம்

3000 ஆண்டுகள் முன்பு மகா குரு அகத்தியர் பிரதிஷ்டை செய்த 432வது லிங்க திருமேனி பதினாறு பட்டைகளுடைய சோடஷ மகாலிங்கம், காஞ்சி மகான் மகா பெரியவா வழிபாடு செய்த திருத்தலமாக விளங்குகிறது அருள்தரும் அறம் வளர்நாயகி உடனுறை அருள்மிகு அகத்தீஸ்வரர் ஆலயம்.

இந்த ஆலயத்திற்கு சென்னை பெங்களூர் தேசியநெடுஞ்சாலையில் பாலுசெட்டிசத்திரம் பஸ் நிறுத்தத்திலிருந்து திருப்புட்குழி மற்றும் முசரவாக்கம் வழியாக கிளார் சென்றால் இத் தலத்திற்கு சென்றடையலாம்.

அப்படி இல்லையென்றால் காஞ்சிபுரத்தி லிருந்து நேரடி பஸ் வசதி உள்ளது (காஞ் சிபுரம் களத்தூர், இறங்குமிடம் கிளார் கிராமம்) (காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 16 கிமீ மற்றும் பாலு செட்டிசத்திரத்திலிருந்து சுமார் 6 கி.மீ) இத்தலத்திற்கு சென்றடையலாம்.

தொண்டை நாட்டில் பஞ்சபூத ஸ்தலங்களில் மண்ணுலகமாக போற்றப்படும் காஞ்சி மாநகரத்தின் மேற்கில் துவக்கமாக விளங்கும் வேகவதி ஆற்றின் வடக்கரையில் உள்ள கிளை யாறு (கிளார்) என்ற கிராமத்தில் அகத்தியர் தடாகத்தின் தென்கரையில் பசுமையான நிலங் களுக்கு மத்தியில் அமையப்பெற்றது.

இத்தலம் எழில் கொஞ்சும் இயற்கை புல் வெளிகள்சூழ இத்தலத்தை சுற்றி பசுமை போர்வை போர்த்தியது போன்று மிக ரம்மியமாக காட்சிதருகிறது.

இயற்கை சூழலுக்கு மத்தியில் அமைந்துள்ள அருள்தரும் அறம்வளர்நாயகி உடனுறை அருள் மிகு அகத்தீஸ்வரர் கோவில் உடலுக்கும் மன திற்கும் புத்துணர்ச்சி தருவதைப்போன்று மிக அழகிய சூழலில் சிவபெருமான் காட்சியளிக்கிறார்.








e-magazine
aanmeegamalar.com

காஞ்சிபுராணத்தில் கூறப்பட்ட ஸ்தலம்

இராமேஸ்வரம், சுசீந்திரம் அடுத்து இங்குதான் மகா மூலிகை நந்தி இருப்பது மேலும் இத்தலத்தின் சிறப்பாகும். இத்தலத்தில் அகத்திய திருக்குளம் இருப்பது சிறப்பு மேலும் மூலவர் பின்புறத்தில் ஒரே கல்லினால் செய்யப்பட்ட பிரமாண்ட சோமாஷ் கந்தர் அமைய பெற்றுள்ளது. சப்தநாத கல்லினால் ஆன மகா குரு அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிப்பு செய்து வருகின்றார். இத்தலத்தைப்பற்றி காஞ் சிபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்று பல்வேறு சிறப்புகளை ஒருங்கே பெற்ற ஸ்தலமாக இந்த ஆலயம் திகழ்கிறது.

இத்தலத்தில் ஆண்டுதோறும் வருடாபிஷேகம் மற்றும் திருக்கல்யாண வைபவம், மாதம் இருமுறை பிரதோஷம் வழிபாடு, ஆண்டுக்கு ஒருமுறை நான்கு கால பூஜையுடன் மகா சிவராத்திரி வழிபாடு, வருடத்திற்கு ஆறு முறை நடராஜர் அபிஷேகம், மாதந்தோறும் அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள் அவர்களுக்கு ஆயில்ய பூஜை, மாதந்தோறும் பௌர்ணமி பூஜை.

பிரதோஷ வழிபாடு, நவராத்திரி விழா, அன்னாபிஷேகம், மேலும் இதர மூர்த்திகளான காலபைரவருக்கு அஷ்டமியில் வழிபாடு, விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி பூஜை, சஷ்டியில் முருகப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடு, நால்வர் பெருமக்களுக்கு குருபூஜை வழிபாடு ஆகியவை இத்திருத்தலத்தில் வெகு சிறப்பாக நடைபெறும் விழாக்கள் ஆகும்.

- திருமண பிரச்சனை, குழந்தையின்மை பிரச்சனை, காதுகேளாதோர் பிரச்சனை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வாக இத்தலம் அமைந்துள்ளது.
- நீண்ட நாட்களாக குழந்தைபாக்கியம் இல்லாத தம்பதியர் இவ்வாலயத்தில் அமைந்துள்ள வெள்ளெருக்கஞ் செடியில் தொட்டில் கட்டி வழிபாடு செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
- நீண்ட நாட்களாக திருமணம் ஆகாத ஆணோ, பெண்ணோ இவ்வாலத்தில் உள்ள வன்னிமரத்தில் திருமாங்கல்ய கயிறு கட்டி ஆலயத்தில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்துவர திருமணம்



நடைபெறும்.

- காதுகேளாதவர்கள் இவ்வாலத்தில் வழிபாடு செய்தால் காதுகேளாத குறைநீங்கும், சந்திர பரிகார ஸ்தலமாகவும் விளங்குகிறது.
- மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க ஆலயத்தில் உழவார பணிசெய்து வழிபாடு செய்தால் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

இதர மூர்த்திகள் :

இத்தலத்தில், ஸ்ரீ தர்மகணபதி, ஸ்ரீ பாலமுருகர், ஸ்ரீ தட்சணாமூர்த்தி, ஸ்ரீ லிங்கோத்பவர், ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ காலபைரவர், நவகிரகங்கள், நாகர்கள், மகா மூலிகை நந்தியம்பெருமான், ஸ்ரீ மகா குரு அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள் போன்றோர் இதர மூர்த்திகளாக காட்சி தருகின்றனர்.

தல விருட்சம் :

இத்தலத்தின்தலவிருட்சமாக வெள்ளெருக்கம் மற்றும் வன்னி மரம் திகழ்கிறது.

வழிபடும் முறை

பௌர்ணமி நாளிலோ அல்லது தங்களுக்கு



உகந்த நாட்களில் தேன் மற்றும் நெல்லிக்கனி சாறுக்கொண்டு அபிஷேகம் செய்து விளக்கேற்றி வழிபாடு செய்வது சிறந்தது.

நடைதிறந்திருக்கும் நேரம் :

தினமும் காலை 800 மணி முதல் 1200 மணி வரை, மாலை 400 மணி முதல் இரவு 800 மணி வரை தொடர்புக்கு 9840390711, 9677652396.

FREE

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை



பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

eBook FREE DOWNLOAD

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com


# ஆன்மீக வழியில் அமைதி

நாம் ஆத்ம ஞானத்தினை அடைவதால் இரண்டு நற்பலன்களை பெறமுடியும். அவை ஜீவன் முக்தி, விதேக முக்தி என்பது ஆகும். ஜீவன் முக்தி என்பது நாம் உயிரோடு உடலோடு இருக்கும்பொழுது மனதில் ஏற்படுகிற மன நிறைவு ஆகும். ஞானத்தை அடைந்த பின்பும் நமது பிராரத்த கர்மா தொடரும். அதாவது ஞானம் அடைவதால் நமது பிராரத்த கர்மா நிறைவு பெறாது. ஆகவே எவ்வளவு காலம் மனிதன் உடலோடு உயிருடன் இருப்பானோ அவ்வளவு காலம் இருந்து மன நிறைவோடு வாழ்வான். அதனை ஜீவன் முக்தி என்று அழைக்கிறோம்.

ஜீவன் முக்தி அடைந்தவர்களுக்கு அனைத்துக் கர்மாக்களும் நிறைவு பெற்று விடும் என்று சாஸ்திரம் கூறுகிறது. கர்மாக்கள் சஞ்சிதா கர்மா, பிரார்த்த கர்மா, ஆகாமி கர்மா என மூன்று கர்மாக்கள் ஆத்ம ஞானத்தால் நிறைவு பெற்று விடும். அதாவது ஆத்ம ஞானத்தால் சஞ்சிதா கர்மா, பிரார்த்த கர்மா போன்ற அனைத்துக் கர்மாக்களும் அழிந்து விடும்.


அக்ஞானிகளுக்கு இருக்கிற சஞ்சிதா கர்மாவின் ஒரு பகுதி மட்டும் வெளிப்பட்டு பிரார்த்த கர்மாவின் சுகதுக்கங்களில் ஈடுபடுகிறது. அதன் மூலம் அந்த ஜீவன் பாவ புண்ணிய கர்மா பலன்களை அனுபவிக்கிறது. ஒரு ஜீவன் மனித பிறவி எடுத்திருந்து சஞ்சிதா கர்ம பலன்களை அவன் அனுபவவித்துக் கொண்டிருப்பான். அவ்வாறு அனுபவவித்துக் கொண்டிருக்கும்போது அவன் செய்யக்கூடிய கர்ம பலன்களுக்கு, அதாவது அப்போது அவனுடைய கர்ம பலன்களில் சேரக்கூடிய கர்மாவுக்கு ஆகாமி கர்மா என்று. சாஸ்திரம் கூறுகிறது.

அக்ஞானிகள் இன்ப துன்பங்களை பாவ புண்ணிய கர்ம பலன்களை அனுபவிக்கும் பொருட்டு பிறப்பு, இறப்பு என்ற நிலைகள் ஏற்படுகிறது. அதாவது அக்ஞானிகள்




e-magazine
aanmeegamalar.com

உலகில் பாவ புண்ணிய பலன்களால் பிறந்து இறந்து கொண்டிருகின்றார்கள். பிரார்த்த கர்மா என்பது முற்றும் துறந்த ஞானிகளுக்கும் அக்ஞானிகளுக்கும் பொதுவானது ஆகும். பிரார்த்த கர்மாவை முற்றும் துறந்த ஞானிகளாலும் அக்ஞானிகளாலும் மாற்றவோ அழிக்கவோ முடியாது. பிரார்த்த கர்மா பலன்களை ஞானிகளோ, அக்ஞானிகளோ வரக்கூடிய இன்ப துன்பங்களை அனுபவவித்துதான் அவற்றையெல்லாம் தீர்க்க வேண்டும்.



நமக்குத் தாங்கிக்கொள்ள முடியாத துன்பங்களோ துயரங்களோ வந்தால் அதனைக் கண்டு பயந்துகொண்டு ஓடாமல், வரக்கூடிய துன்பங்களை சகித்து அதனை ஏற்றுக்கொண்டு தாங்கிக்கொள்ள வேண்டும் என்று இந்து மத சாஸ்திரம் வலியுறுத்திக் கூறுகிறது. இதற்கு மாறாக நாம் துன்பங்கள் துயரங்கள் வந்தால் ஒவ்வொரு துன்பத்திற்கும் நாம் பிராயச்சித்தம் ஏதும் இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு பிராயச்சித்தம் இருக்கிறதா என்று நாம் தேடிக் கொண்டிருந்தால் நாளடைவில் நமது மனம் பலவீனமாக மாறிவிடும்.

அதாவது துன்பம் வரும்போதெல்லாம் பிராயச்சித்தம் ஏதும் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்து விடுவோம். நாளடைவில் துன்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் மன பக்குவம் அடைவதையும் மன உறுதியையும் இழக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம். எனவே நமக்கு கர்மாவால் வரக்கூடிய துன்பங்களைத் தாங்கிக்கொள்வதற்குரிய மனப்பக்குவத்தையும் மனஉறுதியையும் பெறுவதற்கு நாம் பகவானிடம் மனமுருகி வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஞானிகளின் கர்ம வினைகள் எப்படி அழிக்கப்படுகிறது என்றால் எத்தகைய துன்பங்கள் வந்தாலும், அதனைக் கண்டு பயந்துகொண்டு ஓடாமல் சாஸ்திரத்தில் தெரிவித்துள்ளபடி மன உறுதியையும் மன பக்குவத்தையும் ஞானிகள் பெற்றிருக்கிறார்கள். அதாவது ஞானிகள் மரணத்திலும் விருப்பமின்மை, வாழ்வதிலும் விருப்பமின்மை இதுதான் ஞானிகளின் மன நிலையாகும். அதாவது தாமரை இலைத்தண்ணீர் போல் உலகப்பற்றில்லாமல் வாழ்ந்துகொண்டு இருப்பார்கள்.

கர்ம பலன்களால் நமக்கு வருகின்ற இன்ப துன்பங்களையும் சகித்துக்கொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கடவுள் நமக்கு இட்ட கட்டளையாகும். பிரார்த்த கர்மாவினால் வரக்கூடிய துன்பங்களை பொறுத்துக்கொண்டு நாம் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் அவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது நாம் பகவானின் கட்டளையை மீறும் செயலாகும். நமக்கு வரக்கூடிய துன்பங்கள் அனைத்தும் பகவான் இட்டக் கட்டளை என்று நாம் ஏற்றுக்கொண்டால், நமக்கு வரக்கூடிய துன்பங்கள் துயரங்கள் எல்லாம் துன்பங்களாகத் தெரிவதில்லை. இத்தகைய மனப்பக்குவத்தை பெறும்போது நம்மை அறியாமல் நாம் விரும்பும் தேடும் மன அமைதியைப் பெறலாம்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அக்ஞானிகள் ‘நான்

e-magazine
aanmeegamalar.com



பிரம்மனாக இருக்கிறேன்' என்ற ஞானத்தால் முற்றும் துறந்த ஞானியாகி விடுகிறார். ஞானிகளுக்கு அவர் பெற்ற ஞானத்தால் சஞ்சிதா கர்மா பாவ பலன்கள் அழிந்து விடுகிறது. அதாவது பாவ புண்ணியப் பலன்கள் ஞானிகளுக்கு ' நான் பிரம்மனாக இருக்கிறேன்' என்ற ஞானம் அடைவதால் அழிந்து விடுகிறது. மேலும் ஞானிகள் சஞ் சிதா கர்மாவிற்கு ஆதாரமாக இருக்கும் அகங்காரத்தை நீக்கி விடுவதாலும் பாவ புண்ணிய கர்மா பலன்களை அவன் அழித்து விடுகிறான்.

எடுத்துக்காட்டாக ஒரு கறுப்புத்துணி ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனைத் தூக்கி நெருப்பில் போட்டு விட்டால் அது தீயில் எரிந்து விடுகிறது. அதனுடைய கறுப்பு வர்ணமும் துணியுடன் காணாமல் போய் விடுகிறது. கர்மா என்பது தனியாக இருப்பதில்லை. அது அகங்காரத்தை சார்ந்து இருக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. கறுப்புத்துணியோடு கறுப்பு வர்ணமும் காணாமல் போனதைப்போல் கர்மாவினால் வரக்கூடிய அகங்காரத்தை நீக்கி விட்டால் கர்மாவின் பலன்களும் அழிந்து விடும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

கர்மாவிற்கு காரணம் அதற்கு ஆதாரமாக இருப்பது அகங்காரம் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அகங்காரத்தை அழிக்க வேண்டுமானால் ஆன்மிக வழியில் சென்று நீக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். நம்மிடமுள்ள அகங்காரத்தை மன உறுதியோடு முற்றிலும் அழித்து விட்டால், நமது கர்ம பலன்களை எளிதில் அழித்து விடலாம். அவ்வாறு நம்மிடமுள்ள அகங்காரத்தை அழிக்கும்போது கர்ம பலன்களும் அழிந்து நம்மையும் அறியாமல் நாம் தேடும் விரும்பும் அமைதி வந்து விடும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com



கீதாசமையல்

# SPECIAL FOOD

**இயற்கை மூலிகைகளால் சுத்தமாக தரமாக தயாரிக்கப்பட்டது**

## கீதாசமையல் ஸ்பெஷல் புட்




fssai

R.N.22424543000080

**மூட்டுவலி, ஞாபகமறதி, இளநரை, பிரச்சனைகளை தீர்க்கும் கீரை வகை இட்லிபொடிகள்**

| | | |
|---|---|---|
| தூதுவளை கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| முடக்கத்தான் கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| வல்லாரைக்கீரை இட்லிபொடி | 100gm | Rs.130 |
| கொள்ளு இட்லிபொடி | 100gm | Rs.110 |
| கறிவேப்பிலை இட்லிபொடி | 100gm | Rs.100 |

ஐந்து பொடிகளையும் வாங்குபவர்களுக்கு இந்தியா முழுவதும் கொரியர் இலவசம்

**முதுகுவலி, வயதுக்கு வந்த பெண்களுக்கும், கணினியில் தொடர்ந்து அதிகநேரம் பணிபுரிபவர்களுக்கும், ஏற்படும் எலும்பு தேய்மானம், கழுத்து பிரச்சனைகளை தீர்க்கும் கருப்பு உளுந்து, சுக்கு கஞ்சி மாவு கிடைக்கும்**

**1/4 கிலோ ரூ.170** (கொரியர் கட்டணம் தனி)

மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன் பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல் வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.

மேலும்விபரங்களுக்கு: 7550199561